# பழையனூர் நீலி நாடகம்

சென்னைப் பல்கலைக் கழகம்
சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக
அளிக்கப்பெறும் பதிப்பேடு


பதிப்பு :

**இரா. பாரதிராஜா**, பி.லிட்

நெறியாளர் :

**முனைவர் ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்,
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
மெரினா வளாகம், சென்னை - 600 005.



தமிழிலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005.
மே 2003 - 2004.

# பழையனூர் நீலி நாடகம்

சென்னைப் பல்கலைக் கழகம்
சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக
அளிக்கப்பெறும் பதிப்பேடு


பதிப்பு :
**இரா. பாரதிராஜா,** பி.லிட்

நெறியாளர் :
முனைவர் **ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்,
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
மெரினா வளாகம், சென்னை - 600 005.



தமிழிலக்கியத்துறை
**சென்னைப் பல்கலைக் கழகம்**
சென்னை - 600 005.
மே 2003 - 2004.

சுவடியியல் மற்றும் பதிப்பியல்
பட்டயப் பதிப்பிற்காக
அளிக்கப்பட்ட பதிப்பு
வரிசை எண். 4.

முனைவர் **ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்,
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
மெரினா வளாகம்,
சென்னை - 600 005.

# நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழிலக்கியத் துறை சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக **செல்வன் இரா. பாரதிராஜா** அவர்கள் **பழையனூர் நீலி நாடகம்** என்னும் பொருண்மையில் அமைந்த தாள் சுவடியை எனது மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும் இப் பதிப்பு இவரது சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

இடம் : சென்னை
நாள் :

**ய. மணிகண்டன்**
(நெறியாளர்)

**இரா. பாரதிராஜா,**
முதுகலை,
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 600 005.

## பதிப்பு மாணவர் உறுதிமொழி

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழிலக்கியத் துறை சுவடியியல் மற் றும் பதிப்பியல் பட்டயத்திற்காக **செல்வன் இரா. பாரதிராஜா** ஆகிய நான் **பழையனூர் நீலி நாடகம்** என்னும் பொருண்மையில் அமைந்த தாள் சுவடியை **ய. மணிகண்டன்** ஐயா அவர்களின் மேற்பார்வையில் பதிப்பு செய்துள்ளேன் என்றும் இப்பதிப்பு என் சுய முயற்சியால் விளைந்தது என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் : சென்னை
நாள் :

**இரா. பாரதிராஜா**
(பதிப்பு மாணவர்)

# நன்றியுரை

**"சுவடியியல் மற்றும் பதிப்பியல்"** என்னும் ஓராண்டு பட்டயப்படிப்பினை உருவாக்கிப் பயில வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் **முனைவர் வீ. அரசு** அவர்களுக்கு முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பழையனூர் நீலி நாடகம்** என்னும் பதிப்பு உருவாக்கத்தில் ஏற்பட்ட ஐயங்களைப் போக்கி முறைப்படுத்தி நெறிப்படுத்திய **முனைவர் ய. மணிகண்டன் ஐயா அவர்களுக்கு** என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பட்டயப் படிப்பிற்கு உதவிய முனைவர். **கி. ஜெயக்குமார் அவர்களுக்கும், ப.வெ. நாகராசன்** அவர்களுக்கும், **மு.கோ. இராமன்** அவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பழையனூர் நீலி நாடகம்** என்னும் சுவடியினைப் பதிப்பிக்க விருப்பம் தெரிவித்தபோது சுவடியை அளித்து பதிப்பிக்க அனுமதி வழங்கிய அரசினர் கீழ்த்திசை சுவடி நூலக காப்பாட்சியாளர் **எஸ். செளந்தரபாண்டியன் ஐயா** அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பதிப்பு உருவாக்கத்திற்கு நூல்கள் கொடுத்துதவிய **மறைமலை அடிகள் நூலக**த்தார்க்கும், அச்சு வாகனம் ஏற்றிய **அன்றில் ஒளி** அச்சகத்தார்க்கும், மற்றும் **உதவிய நண்பர்களுக்கும்** என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இரா. பாரதிராஜா**

# பதிப்புரை

முத்தமிழின் மூன்றாவது தமிழான நாடகத் த
தொல்காப்பியர் காலம் முதலே வளர்ச்சி பெற்று வந்
ளமையை

**"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கினும்"**
**- (தொல்-அகம்-53**

என்னும் தொல்காப்பிய நூற்பா பறைசாற்றி நிற்கின்ற இந்நாடக மரபிற்கு அடித்தளமமைத்தது நாட்டுப்புற வடி மான தெருக்கூத்தாகும், சங்ககாலத்தில் கலித்தொ முதலியன நாடகப் பாங்கின, மாதவியின் பதினோருவ ஆடல்கள் நாடகக்கலையின் கூறுகளாகும். பல்ல காலத்தின் நாடக வளர்ச்சியை மகேந்திர வர்மனின் மத்தவில பிரகடணம் காட்டி நிற்கின்றது, சோழர் காலத்தில் நா வளர்ச்சிக்கு மிக்க ஆதரவு அளித்தவனாக இராசேந் சோழன் இருந்தனன் என்பதற்குத் தஞ்சைப் பெ கோயிலில் காணப்பெறும் இராசராசேசுவர நாடகம் நட வதற்கு நிலங்கள் அளித்த கல்வெட்டுகள் சான்றாதார நிலைத்து நிற்கின்றன. இவ்வகையில் ஆக்கம் பெற்று வ நாடக மரபிற்குப் பதினெட்டாம் நூற்றாண்டில் சங்கரத சுவாமிகள், பம்மல் கே. சம்பந்தம், ஔை தி.க. சண்மு ஆகியோர் புதுரத்தம் பாய்ச்சினார். இவர்களின் கைப்ப புராண, பக்தி நாடகங்கள் இமயத்தில் இடம் பிடித் மேலும் நாடக அடித்தளமும் விரிவாக்கம் பெற்றது, இத பின் உரைநடை நாடகங்கள் உருவாக்கம் பெற் இந்நாடக மரபினைப் பின்புலமாகக் கொண்டு சில புரா கூறுகளையும், சமுதாயக் கூறுகளையும், உட்கொ

நீலியின் பழிமுடிக்கும் கதையினைக் கூறும் பழைய்னூர் நீலிநாடகம் தோற்றம் பெற்றது.

## அமைப்பு :

விநாயகர் துதி, காப்பு, வாழ்த்து, அவையடக்கம் என்ற மரபுத் தொடக்கத்துடன் நகரச் சிறப்பு முதலாக கதை நகர்ந்து வாழ்த்துடன் நாடகம் முடிவு பெறுகின்றது. விருத்தம், சிந்து, அகவல், தாலாட்டு போன்ற யாப்புக் கட்டமைப்புகளுடன் கதை நகர்கின்றது. ஒரு இடத்தில் மட்டும் உரைநடை இடம் பெறுகின்றது.

இதில் மூன்று, ஒன்பது, இருபத்தொன்று, இருபத் திரண்டு, இருபத்து மூன்று ஆகிய ஏடுகள் காணப்பெற வில்லை. இது கதை ஓட்டத்தின் கதை அறிதலில் சிறிது தடையை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக இருபத்து ஒன்று, இருபத்திரண்டு, இருபத்துமூன்று ஆகிய ஏடுகள் கதையின் திருப்பத்தை உணர்த்தும் ஏடுகளாக இருந்திருக்க வேண்டும்.

## ஆசிரியர்

இந்நாடகத்தினை எழுதிய ஆசிரியரின் பெயரினை அறியமுடியவில்லை. இந்நாடகத்தில் ஆசிரியர் பழையனூர்த் திருவாலங்காட்டு சிவனைப்பற்றிய புகழுரைகளைப் பாடி யுள்ளதால் இவர் சைவர் என்பதும், காஞ்சி மாநகரில் நடைபெற்ற நிகழ்வினை நாடகமாகப் பாடியுள்ளதால் இவர் காஞ்சிபுரத்தினைச் சார்ந்தவராக இருக்கலாம், என்பதும் பெறப்படுகின்றது. 1876க்குப் பின்னரே உரைநடை நாடகங்கள் தோற்றம் பெற்றன. ஆனால் இந்நீலி நாடகம் முழுவதும் செய்யுள் வடிவமைப்பினைக் கொண்டது. எனவே, இந்நீலிநாடகம் முழுவதும் செய்யுள் வடிவமைப் பினைக் கொண்டது, எனவே, இந்நாடகத்தின் தோற்ற காலம் 1876-க்கு முற்பட்டதாக இருக்க வேண்டும்,

இவ்வாசிரியர் விருத்தம், சிந்து இரண்டிலும் கைவரப், பெற்றவராக உள்ளார் என்பதனை இந்நூலின் மூலம் அறியமுடிகின்றது. எனவே இச்சிந்தின் தோற்ற காலம் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிந்தையகாலமாகும். எனவே பதினாறுக்கும் பத்தொன்பதிற்கும் இடைப்பட்ட காலத்தில் இந்நாடகம் தோற்றம் பெற்று இருக்க வேண்டும். எனவே, இவ்வாசிரியர் இக்காலங்களுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். மேலும், விறலிவிடுதூதில் சுப்பிரதீபக் கவிராயர் அவர்கள் நீலியின் வரலாற்றினைப் பதிவு செய்துள்ளார். அது இந்நாடக நிகழ்வுகளுடன் பெரிதும் ஒத்து செல்கின்றது. எனவே இவரே இந்நாடகத்தினையும் எழுதி இருக்கலாம்.

**யாப்பு :**

விருத்தம், சிந்து, தாலாட்டு, அகவல் போன்ற யாப்பு கட்டமைப்புகள் பயன்படுத்தப் பெற்றுள்ளது. இதில்

108 - விருத்தமும்,
70 சிந்தும்,
29 தாலாட்டும்,
22 அகவலும்,
1 சந்த விருத்தமும்

இடம் பெறுகின்றது. ஓரிடத்தில் மட்டும் வசனம் இடம் பெறுகின்றது.

**பதிப்புச் சிக்கல் :**

பொதுவாக பதிப்பின் போது அனைவருக்கும் ஏற்படுகின்ற சிக்கல்கள் இப்பதிப்பிலும் ஏற்பட்டது. சான்றாக,

கொம்பு வேறுபாடின்மை - பொனநாடு (போன நாடு),
நேடு நேரம் (நெடு நேரம்)

| | |
|---|---|
| புள்ளி இடப்படா எழுத்துக்கள் | - நாகரநதை (நாகரந்தை) |
| பேச்சு வழக்கு சொற்கள் | - அஞ்சி (ஐந்து) போறது (போகின்றது) |
| இடையில் எழுத்து விட்டு எழுதுதல் | - பஞ்சாரு (பனஞ்சாறு) மகாபூதாய் (மகா பூதமாய்) தூத்தி, (தூற்றி) |
| மெய் மயக்கம் | - கேழ்க்க (கேட்க) |
| கால்வேறுபாடின்மை | - பத்தாவான (பத்தரவான) நோமானபின் (நேரமான பின்) |
| னகர, ளகர வேறுபாடின்மை | - என்றவன் (என்றவள்) |
| கி,இ, வேறுபாடின்மை | - பகிதளர்ந்து (பதி தளர்ந்து) |
| ணகர, னகர வேறுபாடின்மை | - கன்னி (கண்ணி) |

இவை போன்ற பிழைகளும், பொருள் மாற்றம் கருதி சில சொற்களும் இப்பதிப்பில் திருத்தி எழுதப் பெற்றுள்ளது, எனினும் சில சொற்கள் யாப்பு கருதி அப்படியே எழுதப் பெற்றுள்ளது. மேலும் சில வடமொழிச் சொற்களும் இந்நாடகத்தில் இடம் பெற்றுள்ளன.

பதிப்பின் போது முக்கியமான அதே நேரத்தில் சிக்கலான ஒரு இடர்பாடு என்பது, சில சொற்களை புரிந்து கொள்வதில் ஏற்படும் இடர்ப்பாடு ஆகும். இவ்விடர்பாடுகள் பலருக்கு பல துன்பங்களையும் உண்டு பண்ணியிருக்கின்றன என்பதற்கு சான்றாக அமைவன, உ.வே.சா, சீ.வை.தா, ஆறுமுக நாவலர், வையாபுரிப் பிள்ளை போன்றவர்களின் பதிப்பு வரலாறுகளாகும்.

அவ்வகையில் இப்பதிப்பிலும் சில இடர்பாடுகள் ஏற்பட்டது. சான்றாக,

"கரண்டகம்" என்பது "தாண்டக"மாகத் தெரிந்தது.

"ஒருவரை" என்பது "எருவனா" என்று தெரிந்தது.

"வேறுரை" என்பது "வேனுனா" என்று தெரிந்தது.

"வாய்மலர்ந் தீசன்" என்பது "வாய்மலர்ந்தீரன்" என்று தெரிந்தது.

"கூனை" என்பது "கடனை" என்று தெரிந்தது.

மேலும், இதைப்போன்றே புரிந்து கொள்ள முடியாத சில சொற்கள் இப்பதிப்பில் எழுதப்பெறாமல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**உவமை நலன் :**

**"தோமருவும் புயன்சீதையைப் போல்சிறை யிருத்தி"**

என்றும்

**"வாலியன்று கருங்கடலில் வளைத்தமிர்தம் கடைந் தார்ப்போல்"** என்றும், இவ்வாசிரியர் புராணக்கூறுகளை இடத்திற்கேற்றார் போல உவமையாகக் கையாண்டுள்ளார்.

**"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி**
**தானமது ஆடுகின்ற தன்மையொக்கும் தமிழோரே"**

என்று, தாம் எழுதுகின்ற நாடகம் மயிலைப் பார்த்து வான் கோழி ஆடுவதற்கு ஒப்பாகும், என்று அவையடக்கமாகக் கூறுகின்றார்.

**"பனஞ்சாரு மொழியாள்"**
**"பாலையொத்த மொழியாரே"**

என்று பெண்களின் மொழிக்கு உவமை காட்டுகின்றார்

குண்டோதரனுக்கும், நீலனுக்கும், இடையே நடந்த போரினைக் குறிப்பிடும் பொழுது, இரண்டு மலைகள் பொரு ததுபோல் இருந்தது என்று உவமை கூறுகின்றார்

"வட்டமிட்ட கடலுலகில்
மலையும் மலையும் எதிர்த்தார்ப்போல்"

## உருவக நலன்

நீலனின் உயரத்திற்குக் குறளினை உருவகமாக காட்டுகிறார் ஆசிரியர்

**"உருவம் குறளாய்"**

**"ஓட்டாரக் கள்ளி"** - என்று பலவிடங்களில் நீலி உருவகிக்கப்படுகின்றாள்.

நீலி செய்த கொடுமைக்கு, உருவகம் கூறவந்த ஆசிரியர் "பத்தரவான பாதகம் தன்னை" என்று பாம்புடன் உருவகிக்கின்றார்.

## பழமொழி :

**"கண்பாரார் என்னையிப்போ - இவர்**
**கைபடக்கால்படக் குற்றமென்பார்"** - என்ற பாடல் அடி "ஆகாத பெண்டாட்டி கைப்பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்" என்னும் பழமொழியினை நினைவுறுத்துகின்றது.

**"ஆடுதனைப் புலியழைத்தால்**
**அதுவருமோ நீகேளாய்"**

என்ற பாடல் **"ஆடு நனையுதென்று ஓநாய் அழுகிறதாம்"** என்னும் பழமொழியினை நினைவுறுத்தும் வகையில் அமைகின்றது.

## முற்பதிப்புகள் :

நீலியின் கதை குறித்து பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பல நூல்கள் எழுந்தன, அவற்றுள் பெரும் பாலானவை உரைநடையில், கதையை மட்டும் கூறுவன வாக அமைந்துள்ளன.

"திருவாலங்காட்டில் எழுந்தருளியுள்ள நீலிகதை" என்று செஞ்சியைச் சேர்ந்த ஏகாம்பர முதலியார் அவர்கள் 1907ம் ஆண்டு, ஸ்ரீ மாதவ விலாச அச்சுக்கூடம் - சென்னை யின் வாயிலாக வெளியிட்டுள்ளார். இந்நூலில் ஆசிரியர், நாடக வடிவமாக இருந்ததைக் கதைவடிவில் அமைத்துள்ள தாகக் கூறிகின்றார்.

"ஸ்ரீ சாரதை சதங்கை மணி மலர்" நான்கில் எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் என்பவர் "நீலி பராக்கிரமம்" என்று வேல் பிரஸ் - சென்னை வாயிலாக வெளியிட்டுள்ளார்.

"பழையனூர் திருவாலங்காடு ஸ்ரீ சாக்ஷி பூதேஸ்வரர் ஆலயம் கும்பாபிஷேகம் எழுபது வேளாளர் தீப்பாய்ந்த மணி மண்டபம் திறப்பு விழா சிறப்பு மலர்" என்று 2.5.1966ம் ஆண்டு வெளியிடப் பெற்றுள்ளது.

இதில் வரலாற்றில் பழையனூரின் இடத்தையும், எழுபது வேளாளரின் சொல் காத்த வன்மையையும, நீலியின் கதை வரலாறும், சீரிய முறையில் வெளிக் கொணரப் பெற்றுள்ளது.

பெரியபுராணத்திலும், சுப்பிரதீபக் கவிராயர் விறலிவிடு தூதிலும், நீலியின் கதை வரலாறு இடம் பெறுகின்றது. மேலும் சேக்கிழார் புராணத்திலும், கட்டிமகிபன் பள்ளிலும் தொண்டை மண்டல சதகத்திலும், நீலியைப் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன.

**வரலாற்றில் பழையனூர் :**

செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணி வட்டத்தில் சென்னையிலிருந்து மேற்கே அரக்கோணம் செல்லும் இருப்புப் பாதையில் 59.6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது திருவாலங்காடு, இத்திருவாலங்காட்டிற்குக் கிழக்கே 1.3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது பழையனூர்.

காரைக்காலம்மையார் காலம் தொடங்கி, இன்றளவும் காலவெள்ளத்தில் அழியா புகழிடம் பிடித்துள்ளது இப் பழையனூர்த் திருவாலங்காடு, காரைக்காலம்மையார் பேயுறுகொண்டு தலையால் நடந்து வந்து சிவனை அடைந்தது இத்திருவாலங்காடே, சம்பந்தர், அப்பர், சுந்தரர், ஆகிய தேவார மூவரால் பாடல் பெற்ற சிறப்புடையது. காரைக்காலம்மையார் காலம் முதல் இன்று வரை 2500 ஆண்டு காலத்தில் எந்த மாறுதலுக்கும் உட்படாமல் பழையனூர் என்னும் பெயரையே பெற்று விளங்குகின்றது இவ்வூர். இதற்கு தேவார மூவர் போன்றோரின் பாடல்களும், பிற்கால இலக்கியங்களும் சான்று காட்டி நிற்கின்றன, காரைக்காலம்மையார் காலமான கி.பி. 5ம் நூற்றாண்டின் நிரு பதுங்க பல்லவன் காலம் முதல் கி.பி. 14-ம் நூற்றாண்டின் விஜயநகர அரசர் காலம் வரை இத்திருவாலங்காட்டுக் கோயில்பற்றி 46 கல்வெட்டுகள், 31 செப்பேடுகள் கிடைக்கின்றன. இவை பல்லவர், சோழர், பாண்டியர் விஜயநகர ஆட்சிகளின் காலத்தில் இத்தலம் சிறப்புற்று விளங்கியதையும், அங்குள்ள மக்களின் பண்பாட்டினையும் பிரதிபலிப்பதாக அமைந்து உள்ளது. அவ்வகையில் ராஜேந்திர சோழன் இப்பழையனூர் கிராமத்தை, திருவாலங்காட்டு சிவன் கோயிலுக்குத் தேவதானமாக அளித்ததை ஒரு செப்பேடு கூறுகின்றது. இத்திருவாலங்காட்டில் இன்றளவும் காரைக்காலம்மையார் திருவிழா என்று ஆண்டுதோறும் கொண்டாடப்பெற்று வருகின்றது.

இப்பழையனூர் திருவாலங்காட்டு வேளாளர்கள் "கூழாண்டார்" எனப்பட்டனர், இன்றும் இம்மரபினர் அங்கு உள்ளனர் இப்பழையனூரில் கன்னிக் குட்டை என்னும் இடத்தில் சாட்சி பூதேஸ்வரர் ஆலயம் ஒன்று உள்ளது. இது இப்போது சிதைவடைந்துள்ளது. இக்கோயில் முன்னிலையி லேதான் வேளாளர் எழுபதின்மரும் வணிகனுக்கு சத்தியம் செய்தனர் என்றும், பின்னர் கூறியபடியே இக்கோயில்

முன்னரே தீ வளர்த்து வேளாளர்கள் உயிர்விட்டனர் என்றும் கூறுகின்றனர். எழுபதின்மரும் தீப்பாய்ந்த குளக்கரையின் எதிரில் உயிர் விட்டதற்குச் சாட்சியாக சாட்சிபூதேசுவரர் முன்னர் எழுபது வேளாளர்களின் உருவங்களும் கற்பாறையில் செதுக்கப் பெற்றுள்ளது. இப்பழையனூர் சுடுகாட்டில் இருபது அடி அகலமும் பத்தடி உயரமும் கொண்ட பாறை ஒன்று உள்ளது. அதனை "நீலிக்கல்" என்று இன்றும் அழைக்கின்றனர். இத்தரவுகள் நீலியின் வரலாறு என்பது உண்மைச் சம்பவம் என்பதனை உணர்த்தி நிற்கின்றது. இப்பழையனூர் திருவாலங்காட்டுத் தல புராணம் வடமொழி பதினென் புராணத்தில், மார்க்கண்டேய புராணத்தில் அகத்திய முனிவர் அருளியதாகவும், அதனை வியாசர் தொகுத்து சூதருக்குச் சொல்ல, சூதர் செனக முனிவருக்குக் கூறியதாகவும் அமைந்துள்ளது.

## நீலிக்கதையின் காலப்பழமை :

காரைக்காலம்மையார் அவர்கள்

கொங்கை திரங்கி நரம்பு எழுந்து
குண்டுகண் வெண்பல் குழிவயிற்றுப்
பங்கி சிவந்து இருபற்கள் நீண்டு
பாடுயர் நீள்கணைக்கால் ஓர்பெண்பேய்
தங்கு அலறி உலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கதம் குளிர்ந்து அனலாகும் எங்கள்
அப்பன் இடம் திருவாலங்காடே

என்று சிவன் உறையும் பழையனூர்த் திருவாலங்காட்டைப் பற்றிக் கூறும்பொழுது நீலியைப் பற்றியும் பதிவு செய்கின்றார்.

திருஞானசம்பந்தர் அவர்களும் தன் பாடலில் நீலியினைப் பற்றி பதிவு செய்துள்ளார்.

------------ முனைநட்பாய்
வஞ்சப்படுத் தொருத்தி வாழ்நாள் கொள்ளும்
வகைகேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு எம்அடிகளே
(முதல் திருமுறை)

என்று பழையனூரினையும், நீலியையும் அடையாளப்படுத்து கின்றார். மேலும், சேக்கிழார் புராணத்தில், இப்பழையனூர் நீலியின் வரலாறு விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகன் உயிர்இழப்பத் தாங்கள்
கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக்
குழியில் எழுபதுபேரும் முழுகிக் கங்கை
ஆறணி செஞ்சடைத் திருவாலங்காட்டு அப்பன்
அண்டமுள நிமிர்ந்தாடும் அடியின் கீழ்மெய்ப்
பெறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்
பிரித்து அளவிட்டு இவரளவெனப் பேசலாமோ"

என்று நீலியால் இறந்த எழுபது வேளாளர்களின் புகழினைப் பதிவு செய்கின்றார்.

## நீலகேசியும் நீலியும்

காரைக்கால் அம்மையார் காலம் முதல் வாய்மொழியாக வழங்கி வருகின்ற நீலிக்கதையில் இடம் பெறும் நீலியே நீலகேசியின் காப்பியத் தலைவியாகப் பரிணமித்துள்ளாள், பாலாலையச் சுடுகாட்டில் உயிர்க்கொலையைத் தடுக்கும் முனிச்சந்திரன் என்பவரைக் கொல்வதற்காக அங்குள்ள பலபேய்களும் ஒன்றுகூடி பழிமுடித்துப் பழையனூரில் திரிந்து வந்த நீலியை அழைக்கின்றன, அவ்வண்ணமே நீலியும் முனிச்சந்திரரை கொல்ல எண்ணி, அவரிடம் சென்று அவரின் அறிவுரையால் அவரின் சீடராகி, பௌத்தர்களை வாதத்தில் வென்ற கதையை நீலகேசியாகும். பழையனூர்

நீலகேசி என்று கூறும் மரபு இக்காலம் முதலே தோற்றம் பெற்றது.

## மூவேந்தர் புகழுரை

நீலிக்கதையில் வேளாளர் எழுபதின்மர் இறந்த பின்னர் மூவேந்தர்களும் பழையனூருக்கு வந்து அவர்கள் இறந்த அக்கினி குண்டத்தினைக் கண்டு துயரெய்தி மெய்மறந்து வாழ்த்தினர் என்பர்.

**"யாவரே காராளர் யாவரிணை ஆவார்**
**நாவாலோ நாவாலோ நாவாலோ - கோவைப்**
**பொருப்பால் அளந்தார்க்குப் போதுமே உண்மை**
**நெருப்பால் அமைந்தார்க்கு நேர்"**

என்று சேரரும்

**"எல்லை பல்கடந்தட்டு எங்கும் புகழ்பூத்துத்**
**தொல்லை மனுக்காக்கத் தோன்றிற்றே - கொல்லை**
**வழியில் ஒருபேய் நின்று வஞ்சனையால் செய்த**
**குழியில் எழுசெந்தீக் கொழுந்து"**

என்று சோழரும்

**"பிழைத்தாரோ காராளர் பேய்மகள் சொற்கேட்டுப்**
**பிழைத்தார்கள் அல்லர்பிழை தீர்த்தார்கள் - பிழைத்தார்கள்**
**எல்லாரும் கான எரியகத்தே மூழ்கினர்**
**எல்லாரும் இன்றும் உளர்"**

என்று பாண்டியரும் வாழ்த்திச் சென்றனர்

## விறலிவிடுதூதில் நீலிக்கதை

விறலிவிடுதூதில் சுப்பிரதீபக் கவிராயர் என்பவர் நீலியின் கதையைப் பலப்பாடல்களின் மூலம் பதிவு செய்து உள்ளார்.

“நடந்ததைக் கேளிர் நடுக்காட்டில் நீலி
தொடர்ந்தாள் ஓர்செட்டி தனைச்சூதாய் - நடந்தவன்கைப்
பத்திரத்தால் தப்பிப் பழையனூர் அம்பலத்தில்
மொய்த்திருந்த வேளாளர்முன் சென்றாள் சத்துருப்போல்”

“ஆலங்காட்டுப் பேய்அதோ வருகுது எம்மனையாள்
கோலங்காட்டிப் பகட்டிக்கொண்டு என்றான் நீலிஎனும்
கள்ளி முலைப்பாலும் கண்ணீரும் கால்கழுவக்
கள்ளியொன்றைப் பிள்ளையாக் கையேந்தி
மெள்ளவந்து”

“நாட்டிலே கண்டதுண்டோ நல்லாரே என்னைநடுக்
காட்டிலே விட்டார் கணவனார் மீட்டுமவர்
கிட்டவந்தார் நான்பயந்து கெஞ்சிவந்தேன் வாளுருவி
வெட்டவந்தார் முன்னாள் விதிப்படியோ முட்டமுப்பப்”

“பேயென்றார் என்னையிந்தப் பிள்ளைக்கள்
ளிகொம்பென்றார்
தாயென்றார் இல்லை தமரில்லை தூயவரே
பீர்விட்ட வான்முலைக்கீழ்ப் பிள்ளையைவிட் டாலதுதான்
ஆர்கிட்டப் போமென் றறியலாம் பாருமென”

“விட்டாள் சபையில் அதுமெள்ளத் தவிழ்ந்துமடி
தொட்டேறச் செட்டி துணுக்குற்றான் ஓட்டாரம்
பண்ணுகிறான் செட்டியென்றார் பார்த்தவரெல் லாமவர்
கண்ணானை நீலிஎன்றான் கால்நடுங்கிப் பெண்ணலது”

“சத்துருப்பே யாகிச்சதி செய்தால் நாங்களுனக்கு
இத்தனைபே ரும்பழிகாண் என்றுரைத்துப் பத்திரத்தை
வாங்கி வணிகனையும் மார்க்கமிட்ட நீலியையும்
பாங்கில் ஒருவீட்டில் படுக்கவைத்துத் தூங்குமெனப்”

"பூட்டிக் கதவடைத்துப் போயினர் பேய்மதியோர்
வாட்டமுள்ள நீலிபழி வாச்சுதென்றே - ஊட்டி
பிடித்தாள் வணிகன் பிடரிதனைக் கையால்
ஒடித்தாள் களித்தாள் உதிரம் குடித்தாள்பின்"

"நீண்டாள் பிளந்தெழுந்தாள் நெஞ்சில் குடர்மாலை
பூண்டாள் எழுந்தாள் பொருள்வணிகன் மாண்டதற்பின்
கண்டார்வழக் கையெந்தக் கற்பனையால் கற்பனைகள்
விண்டாலும் பெண்வார்த்தை மெய்யாம் காண்"

என்று இவர்கூறும் கதைநிகழ்வு, இந்நாடகக் கதையுடன் மாறுபாடில்லாது, பெரிதும் ஒத்துச் செல்கின்றது. மேலும், இந்நீலி நாடகத்தில் இடம் பெறும் வாள் என்ற பொருள் தரும் பத்திரம் என்னும் அதே சொல்லாட்சியையும் நீலியானவள் கள்ளியினை பிள்ளையாக்கும் அதே நிகழ்வையும் பதிவு செய்துள்ளார். எனவே, இவரே இந் நாடகத்தையும் எழுதியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

## நீலி பராக்கிரமம்

ஸ்ரீ சாரதை சதங்கை மணி மலரில், எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் என்பவர் நீலிபராக்கிரமம் (அ) பழையனூர் நீலிகதை (அ) வேளாளர் தீக்குளித்தல் என்ற தலைப்பில், நீலியின் கதையினைப் பதிவுசெய்து உள்ளார், இதுபின் நூலாகவும் வெளியிடப்பெற்றுள்ளது, இக்கதையில் கூறப்பெறும் கதைநிகழ்வுகளும், கதைமாந்தர்களும், நீலி நாடகத்தில் கூறப்பெறும் கதை நிகழ்வுகளும், கதை மாந்தர்களும் சில வேறுபட்ட அமைப்பினைக் கொண்டதாக உள்ளது எனினும் முடிவு ஒன்றாகவே அமைந்திருக்கின்றது.

மேற்கண்ட தரவுகளின் மூலம் நீலிக்கதையின் காலப் பழமையையும் இக்கதையின் மெய் நிலையையும் நிறுவ

முடிகின்றது. மேலும் இக்கதை காலங்காலமாக தெருக் கூத்துகளில் நாடகமாகவும், நடிக்கப் பெற்று வந்துள்ளது, இவ்வாற்றான் வாய்மொழியாக வழங்கி வரப்பெற்ற இக்கதை பின்னாளில் நாடகமாக மறுமலர்ச்சிப் பெற்றுள்ளமையை இந்நாடகம் உணர்த்தி நிற்கின்றது.

## நீலிக்கதையின் மெய்நிலை :

காரைக்காலம்மையார், திருஞானசம்பந்தர், சேக்கிழார், சேர, சோழ, பாண்டியர்கள், சுப்பிரதீபக் கவிராயர், எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் போன்றோர்கள் பதிவு செய்துள்ள தரவுகள் இக்கதையின் உண்மை நிலைக்கு சான்றாதாரம் காட்டி நிற்கின்றன. மேலும் போலித்தனமாக கண்ணீர் வடிக்கின்றவர்களைக் கண்டால் "நீலித்தனம் பண்ணாதே", "நீலிக் கண்ணீர் வடிக்காதே" என்று கூறும் பழக்கம் இன்றும் உள்ளதையும் நாம் அறிய முடிகின்றது. "நீலிக்கு நெற்றியிலே கண்ணீர்" என்னும் பழமொழியும் வழக்கில் உள்ளதையும் அறிகிறோம். எனவே இத்தரவுகள் இந்நீலியின் கதை வரலாறு வெறும் கற்பனைக் கதையல்ல என்பதனை உறுதிசெய்கின்றது.

## நீலிக் கதையில் வேறுபாடு :

இது வாய்மொழியாகவே பலகாலம் வழங்கி வரப்பெற்ற கதையாகலின், இக்கதை நிகழ்வுகளிலும், கதை மாந்தர் களின் பெயர்களிலும் சில வேறுபாடுகளைக் காண முடிகின்றது.

அவ்வகையில் ஸ்ரீ சாரதை சதங்கை மணி மலர் - நான்கில் எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதிய நீலி பராக்கிரமம் (அ) வேளாளர்கள் தீக்குளித்தல் என்ற தலைப்பில் எழுதப் பெற்ற நீலியின் கதையில் சிலகதை நிகழ்வுகளும், கதைமாந்தர்களும் வேறுபட்டுள்ளனர். அவ்வகையில் விதேகன் என்பவன் இருமனைவியைக் கொண்டவன், இதில்

மூத்த மனையாளை வெறுப்பின் காரணமாகக் கொன்று விடுகின்றான். அவள் மறுபிறவியில் புரிசைக்கிழானுக்கு மகளாகப் பிறந்து பேயாகின்றாள். மறுமையில் விதேகன் செட்டியாரின் மகனாகப் பிறந்து சுதரிசனன் என்னும் பெயருடையவனாக விளங்குகின்றான், இச்சுதரிசனனை, நீலி பழிவாங்குவதாகக் கதை முடிகின்றது.

இவ்விரண்டு கதைகளின் தொடக்கத்தில் சிறு வேறுபாடு இருப்பினும், கதையின் முடிவுகள் இரண்டும் ஒன்றாகவே உள்ளது.

சேக்கிழார் தன் பெரிய புராணத்தில் கூறும் நீலியின் கதையும், இந்நீலி நாடகத்தின் கதையும் ஒத்துச் செல் கின்றது. எனினும் எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் கூறும் கதையிலும் சேக்கிழார் கூறும் கதையிலும் நீலனைப் பற்றிய குறிப்புகள் ஏதும் காணப்பெற வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. எழுபது வேளாளர் தீர்பபாய்ந்த மணிமண்டபம் திறப்புவிழா சிறப்பு மலரில் இந்நாடகத்தில் இடம் பெறும் தேசிகனின் பெயர் தரிசனன் என்று கூறப்பெற்றுள்ளது. மேலும், இந்நீலி நாடகத்தில் சேசிகன் இறந்தபின் நீலியானவள் கிழவி வேடம் புரிந்து பழயனூர் வேளாளர் களுக்குத் தெரிவிப்பதாக கூறப்பெற்றுள்ளது. ஆனால், இத்திறப்பு விழா சிறப்பு மலரில் தரிசனன் தாய் தரினனைத் தேடி வந்தபின் வேளாளர்கள் உண்மையை அறிவதாக கூறப்பெற்றுள்ளது.

எனவே வாய்மொழியாகவே வழங்கி வருகின்ற வழக்காறுகள் மாற்றங்களுக்குட்படுவதை இந்நீலியின் கதை வரலாறு பறைசாற்றி நிற்கின்றது.

## நூல் நுவலும் கதை

பழையனூரினைச் சார்ந்த நான்மறையோன் என்பவன், காஞ்சிபுரத்து கொன்றையஞ்சடையார் மகளைத் திருமணம் செய்து கொண்டு, மாமனார் வீட்டிலே சிறிதுகாலம் வாழ்க்கை நடத்துகிறான். பின்னர் பரத்தையர்பால் நாட்டம் கொண்டு திரிகின்றான். பின்னர் ஒரு நாள் மறையோன், மாமனாரிடம் வந்து, உந்தன் மகளை எங்கள் ஊருக்கு அழைத்துச் செல்லப் போவதாகக் கூறுகின்றான். மாமனாரும் மிகவும் மகிழ்ந்து பல வரிசைகளுடன் மகளை அனுப்பி வைக்கின்றார்.

இருவரும் காட்டின் வழியே செல்லும்பொழுது வழி நடைக்களைப்பினால் இருவரும் உறங்கி விடுகின்றனர். அப்பொழுது, நான்மறையோன் எழுந்து தன் மனைவியின் அணிகலன்களை எல்லாம் பரித்துக்கொண்டு அவளை அங்கேயே விட்டுவிட்டுச் சென்று விடுகின்றான். கண் விழித்துப் பார்த்த மறையோன் மனைவி, தன் கணவன் தன்னை வஞ்சித்துச் சென்றதை எண்ணி புலம்புகின்றாள். பின்னர் மீண்டும் வந்து, தன் தந்தையிடம் நடந்ததைக் கூற, அவர் தன் மகளுடன் மகனையும், மறையோனைக்காண அனுப்பி வைக்கின்றார்.

மறையோன் மனைவியும் அவள் தமையன் ஆகிய இருவரும் பழையனூருக்கு செல்லும் வழியில் ஒரு கானகத்தில் வழிநடைக் களைப்பினால் உறங்கி விடுகின்றனர். இவர்களின் வரவினை அறிந்த மறையோன் இருவரையும் கொன்று விட்டு, தன் மனைவின் வயிற்றிலிருந்த கருவினை எடுத்து கள்ளிச் செடியில் வீசிவிட்டுச் சென்று விடுகின்றான்.

இருவரின் சீவனும் எங்கும் போகாமல் பழையனூர் திருவாலங்காட்டில் திரிந்து சென்று அங்குள்ள சிவனை வழிபட்டு நின்றது.

அப்பொழுது புரிசைக்கிழான் என்னும் மன்னன் சிவனிடம் மகப்பேறு வேண்ட, சிவன் தன்னை வழிபட்டு நின்ற இருவர் சீவனையும் புரிசைக்கிழானுக்கு மக்களாகப் பிறக்குமாறு அருள் வழங்கினார். புரிசைக்கிழானுக்கு சிவனின் அருள்படியே ஆண், பெண் இருவருமாய்ப் பிறந்து வளர்ந்து ஓராண்டு கழிந்த பின்னர் இரு குழந்தைகளும் பேயாக மாற்றம் பெற்றன. இதனை அறிந்த புரிசைக்கிழான் மீண்டும் காட்டில் தன் இரு குழந்தைகளையும் விட்டு விடுகின்றான்.

பழயனூர் காட்டிலே வேம்பினை இருப்பிடமாகக் கொண்டு பல பேய்களுடன் இருவரும் நீலன் நீலி என்னும் பெயருடன் வாழ்ந்து வருகையில் பழையனூர் வேளாளர்கள் நீலன் இருந்த வேம்பினை வெட்டிவிடுகின்றனர். இதனை அறிந்த நீலன் கோபமுற்று பழிவாங்கத் துடிக்கின்றான். அப்பொழுது நீலன், சிவனுக்கு அமுதுபடைக்க வந்த மறை யோனைக் கொன்றுவிடுகின்றான். இதனால் கோபமுற்ற சிவன் நீலனை அழித்துவிடுகின்றார். இதனை அறிந்த நீலி மிகவும் மனம் கலங்கி பழையனூரின் வேளாளர்களை பழிவாங்குவேன் என்று சபதம் செய்கின்றாள்.

நீலன், நீலி என்னும் பேய்களாகக் காரணமாக இருந்த நான்மறையோன் மறுபிறப்பில் நாகரந்தை செட்டியாரின் மகனாகப் பிறக்கின்றான். அவனுக்கு விற்பனவேள் தேசிகன் என்று பெயரிட்டு மகிழ்கின்றனர். இம்மகனுக்கு ஒரு பேயால் இறப்பு நேரிடும் என்று நாகரந்தை வேதியர்கள் தான் கூடி

யாகத்தில் ஒரு சுரிகையினை (கத்தியினை) வரவழைத்து அவன் கரத்தில் அளிக்கின்றனர். தேசிகன் வளர்ந்து திருமணப் பருவம் எய்தியவுடன் திருமணம் செய்து வைத்து தன் மகனுக்கு பல அறிவுரைகளைப் பகிர்கின்றார். பின்னர் விதியின் வசத்தால் செட்டியார் கூற்றவனுக்கு இறையானார்.

தன் தந்தையின் இறப்பிற்குப்பின் தேசிகன் வாணி கத்தின் பொருட்டு, தன் மனையாளைப் பிரிந்து பழையனூ ருக்குப் புறப்படுகின்றான். நடுக்காட்டு வழியே சென்று கொண்டு இருக்கும்பொழுது பழிமுடிக்கக் காத்திருந்த நீலியானவள் தேசிகனை வழிமறிக்கின்றாள். இருவருக்கும் இடையே பல வாதங்கள் நடைபெறுகின்றன. தேசிகன் தன் கரத்தில் உள்ள வாளினால் நீலியை நோக்கி வீசவே அவனிடம் நெருங்க முடியாமல் ஒரு சூழ்ச்சியை மேற்கொள் கின்றாள். அதற்கென ஒரு கள்ளிச் செடியை எடுத்து குழந்தையாக்கிக் கொள்கின்றாள் இருவரும் பழையனூர் அம்பலத்தை அடைகின்றனர்.

அம்பலத்தில் சென்றவுடன் நீலி அபயமிடுகின்றாள். அபயமிட்ட நீலியிடம் பழையனூர் வேளாளர்கள் குறை கேட்கின்றனர். அப்பொழுது நீலி தேசிகனைக் காட்டி தன் கணவன் இவரென்றும், இவர் தன்னை நடுக்காட்டில் விட்டுவிட்டு வந்துவிட்டார் என்றும், பரத்தையர் மோகத்தால் என்னைக் கொல்ல எண்ணுகின்றார் என்றும், கையில் உள்ள குழந்தை எங்களுடையதே என்றும் கூறி அக்குழந்தையை இறக்கி விட, அது தேசிகனின் காலைச் சென்று பிடித்தது. தேசிகன் இவையெல்லாம் பொய் வேடம் இவற்றை நம்பவேண்டாம் என்று எதிர் வாதம் செய்தும் வேளாளர்கள் தேசினை நம்பாமல் நீலியின் கண்ணீரைக் கண்டு அவளின் வாதத்தினையே நம்பி விடுகின்றனர். பின்னர் வேளாளர்கள்

தேசிகனிடம், மனைவியுடன் சேர்ந்து வாழவேண்டும் என்றும், உனக்கு ஏதேனும் குறை இவளால் நேரிடின் நாங்கள் எழுபதுபேரும் உயிர் துறக்கின்றோம் என்றும் கூறிவிட்டு, அவனிடமிருந்த சுரிகையினை வாங்கிக் கொண்டு, நீங்கள் இருவரும் ஓரிரவு இந்த அறையில் தங்கினால் உங்களின் மனக்கவலை தீருமென்று கூறி இருவரையும் ஒரு அறையில் விட்டு பூட்டிச் சென்று விடுகின்றனர்.

நீலியானவள் முற்பிறவியில் தன்னை வஞ்சித்து நடுக்காட்டில் கொன்றதற்காகத் தேசிகனையும், அதே நேரத்தில் நீலன் இருந்த வேம்பினை வெட்டி அவன் இறப்பிற்குக் காரணமாக இருந்த பழையனூர் வேளாளர் களையும் பழிவாங்கி தன் சபதத்தை நிறைவேற்றும் நேரம் வந்துவிட்டதென்றெண்ணி மகிழ்ந்து தேசிகனைக் கொன்று விடுகின்றாள். பின்னர் உண்மையினை அறிந்த பழையனூர் வேளாளர்கள், நம் தவறான வாதத்தினால் தேசிகன் இறந்தனனே என்று மனங்கலங்கி தாம் கூறியபடி வாய்மையை நிறைவேற்றத் திருவாலங்காட்டு சிவனின் முன்னர் அக்கினி குண்டம் வளர்த்து தன் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். தேசிகனின் இறப்பினை அறிந்த அவன் மனைவியும் தன் கணவனுடன் தானும் உயிர்துறக்கின்றாள்.

# பொருளடக்கம்


1. நன்றியுரை 5

2. பதிப்புரை 6-20

3. நூல் நுவலும் கதை 21-24

4. நூல் 27-100

**5. பின்னிணைப்பு**

5.1. அருஞ்சொற்பொருள் விளக்கம் 101-102

5.2. சொல்லடைவு 103-105

5.3. பாடல் முதற்குறிப்பு அகராதி 106-110

5.4 துணைநூற் பட்டியல் 111

# பழையனூர் நீலி நாடகம்

## விநாயகர் துதி

### விருத்தம்

கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினைக்
கணபதி யென்றிடக் காலனுங் கைதொழும்
கணபதி யென்றிடக் கரும மாதலால்
கணபதி யல்லதோர் கருமம் இல்லையே (1)

## காப்பு

## ஹரிஓம் நன்றாக குருவாழ்க
## (குருவே துணை)

### விருத்தம்

கலைகளுறும் மால்மருகா கற்பகமே கணபதியே
மலைகளுறும் பூங்குழலாள் மலையரையன்
மகள்மகனே
பழையனூர் நாடகத்தைப் பழுதறவே யான்பாட
பிழைகள்வொன்றும் வாராமல் பிள்ளையாரே
முன்நடவாய்(2)

ஈராறுதோள் முருகா யீசன்மகன் இளையோனே
வாராய் வேலாயுதனே வள்ளியோட மணவாளா

காரார் நீலிபழிக் கழுவியதோர் நாடகத்தை
சீராக யான்பாட சேவகனே முன்நடவாய் (3)

திருமறை சேரெழுத்தாணி திருக்கரத்தே தரித்தருளும்
மருமலர்வெண் டாமரையில் வந்துதித்த மாதேவி
பெருமையுள்ள பழையனூர் நாடகத்தைப் பேசுதற்கு
தருமநெறி தவறாத சரஸ்வதியே முன்நடவாய் (4)

# வாழ்த்து

### விருத்தம்

நன்றாக நன்றாக நான்மறையோர் தான்வாழ்க
குன்றாமல் மழைபொழிய குவலயத்தோர் மிகவாழ
மன்றாடு மிகுபுயத்தார் மன்னவர்கள் மிகவாழ
நன்றாகயிக் கதையை உரைப்போர்கேட் போர்மிகவாழி
(5)

நன்றாகக் காஞ்சிவாழ் நான்மறையோர் மிகவாழி
குன்றாத புவனம்வாழி குவலயம் ஏழும்வாழி
நின்றாடே காம்பர்வாழி நீண்டவட மலைவாழி
சென்றாடும் தீர்த்தம்வாழி திருவாலங்காடு வாழி (6)

மூலமாஞ் சிவகயிலை முத்தமிழ்சேர் வைகுண்டம்
ஆலங்காட் டம்பலமும் ஆனசிவ பக்தர்களும்
சீலமலை வடகுன்றாம் நிறைந்ததிரு காளத்தி
கோலமுள்ள காஞ்சிபுரம் குவலயமெல் லாம்வாழி (7)

## அவையடக்கம்

### விருத்தம்

மானகர்சூழ் பூவுலகில் வாதனாபிக் குபகாரி
நானும்வல்லேன் பாடவென்று நான்யிசைத்த
தன்மையது
கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானுமது ஆடுகின்ற தன்மையொக்கும் தமிழோரே (8)

## காஞ்சிமாநகர்ச் சிறப்பு

### விருத்தம்

சித்தம் பலமறிய திருவாலங் காடுதனில்
பத்திமணிக் குழைநெகிழப் பலர்கொண் டாடுநாடு
------- நீலிபழி துலைக்கும் நாடு
அத்தபழம் பொருதுநாடு அத்தகிரி வளநாடு
சொல்தவறா வளநாடு சோணேசர் பாதமதை
நித்தமற வாதவர்கள் நீள்வேந்தர் நன்னாடே (9)

கச்சியச் சாலை தவஞ்செய்த நாடு
கண்ணப்பன் முக்திபெறக் கண்ட நாடு
அச்ச மறச் சம்பந்தர் இயலுக்காக
அங்க மெல்லாம் பூம்பாவை யானநாடு
பச்சை வண்ணன் முத்தமிழின் பாடலுக்காய்
பாவலன் பின்பாய்ச் சுருட்டிப் போனநாடு
மெச்சிடவே பழிக்குப்பழி கொடுத்த நாடு
வேளாளர் மேவிவளர் தொண்ட நாடே (10)

முன்கையைச் சந்தனமா யுறைத்த நாடு
முளைவாரி யமுது படைத்திட்ட நாடு
பண்புடனே பாணன் பிணம்சுமந்த நாடு
பறையனைக் கூடவைத்து..... னாடு (11)

சூலிமுதுகில் சோறு படைத்த நாடு
துய்யாவின் வாயில்விரல் விட்ட நாடு
ஆடைகீறிச் சிலந்தி காட்டு நாடு
அறிவாள் பின்பாகம் பிறந்த நாடே (12)

## சிந்து

நாடே தொண்டவள நாடே
(மூன்றாவது ஏடு காணவில்லை)

## நான்மறையோன் - கொன்றையஞ்சடையார் மகள் திருமணம்

### அகவல்

காஞ்சீ புரத்தில் கனக மண்டபத்தில்
வாஞ்சியத் துடனே வந்தே நின்று
ஏகம்ப வாணரை யிறைஞ்சிப் போற்றி
மாகம் பருகே வந்தே நின்றான்
நின்றவன் தன்னை நேருடன் கண்டு
கொன்றையஞ் சடையார் குணத்துட னழைத்து
எங்கே யெவ்வூர் எங்கே வந்தாய்
என்றவுடன் வேறுரை ......... செய்வான்

அய்யரே உந்தன் அடியேன் உரைகேள்
பங்கயம் சூழும் பழையனூர் தன்னில்
அன்னையும் பிதாவும் வறுமை யெய்ததனால்
நின்பொருள் கேட்கநான் வந்தேன் என்றவுடனே
ஈசனு மிரங்கி நன்றெனக் கொடுத்தனர்
நாலுவடகம் பொன்தான் நல்பொருள் வாங்கி
நான்மறை யோனும் பெண்ணது கொள்ள (13)

பிரியமதுற்று மன்னமா நகரத்து தனிமறையோன்
தன்குலத் தொருவன் தன்னையுங் கண்டு
நின்குல மகளை நீதாரு மென்ன
பெண்ணது கேட்கப் பிரியம துற்று
வாருமென் றழைத்து வரிசைய துடனே
நிந்தன் கோத்திரம் நீமொழி யென்ன
பின்புதா னிவனும் பிரபலத் துடனே
எந்தன் கோத்திரம் கௌசிக னென்ன
அதனால் நல்லதென் றன்புடன் இணங்கி
மானா பரனே மருகனே நீகேள்
எந்தன் மகளை இயல்மணம் செய்து
சந்ததம் நடத்தும் தகமை கேளென்று
பத்தியா லேகாம்பர் சன்னதி தன்னில்
சத்தியங் கொண்டு தன்னக மதனில்
அந்தநாள் முதலாய் வளம்பெற பூசை
தந்திர மாகத் தனது செய்து (14)

இப்படி யாண்டு இருக்கும் வேளையில்
மைப்புயல் கன்னியை மணமது செய்து
இருவரும் கூடி யின்புற் றிருந்து

சிறிது காலந் சென்றதின் பின்பு
பிரியத் துடனே பேட்டையம் பதியில்
திருநாள் கண்டு தேவதாசி களுடனே
மருவி யிருந்து வந்தனன் மறையோன்
மறையோன் வந்தபின் மச்சினன் கண்டு
வரிசைய தாக வாருமென் றழைத்து
வெண்ணீர் பிடித்து வெந்த சீராடி
மனைதனில் புகுந்து மச்சின் னுடனே
கூடியி ருவரும் குலாவியே யிருந்து
போசன மருந்தி சந்தனம் புனுகு
தானது பூசி தாம்பூல மடைக்காய்
தானது அருந்தி யிருவரும் ஓரிடம்
இருக்கும் வேளையில் மாமனார் கண்டு
வகைப்படியா கத்தார்மார் பன்தரஉவந் தனனே (15)

## வரிசைகள் வழங்கல்

போனீர் வந்தீர் புதுமைக ளுண்டோ
ஏனில் சொல்வீர் என்றவன் கேட்க
ஆதி வராகன் அருள்பெறக் கூறினன்
பாதி யனூர் பங்கெனக் குண்டு
தாயுடன் பிறந்த தயவுள மாமன்
மாய மதாய்க் கைவசமாய்க் கொண்டான்
போன பங்குக்காய் பொருள் வேணுமென்ன
நானுமைக் கேட்க நாடிவந் தேனென
இவ்வுரை இன்பங் குளுந்து
பத்தியாய் மகிழ்ந்து பரிவுடன் நூறுபொன்

மைத்திரு கொன்றைச் சடையனார் கொடுத்தார்
பொருளது வாங்கி புகழ்பெற முடிந்து
கருணைசேர் மருகன் கண்களி கூர்ந்துநாம்
எண்ணின படியே ஈசுர னருளால்
இன்று தவசு ஈடேறினேன் யென்று
மனமது மகிழ்ந்து மனத்தி லெண்ணி
வந்தன் மகளை ஊருக் கனுப்பென (16)

மாமனார் தன்னை வணங்கினன் மருகன்
நல்ல கொன்றைச் சடையார்
தயவது பிறந்து மன்னவர் மெச்ச
மாமறை யோன்தன் பிள்ளையும் வரிசை
பிரியம துடனே மண்டலம் புகழ
மயிர்முடி சவுரி கெண்டிகை தாழம்
கிளர்ந்தம்பிகை காலாழி பீலிகை அணிவளையல்
மேலான வெள்ளிச் சரிகையுங் கொடுத்து
காலில்படா கம்கடகம் பவழம்நா ளெட்டுமாடையில்
நலம்பெறு காரையும் நாகச் சுற்றும்
நவமணிமோ திரம்அகமகிழ் ஆனந்த முடிச்சும்
நெத்திப் பொட்டும் நெளி மோதிரமும்
உற்ற கைவநிதி யொளிபெறு பதக்கம்
பொன்னாயிரம் பெறும் புதியகை வளையும்
மென்மைய துடனே வெள்ளித் கரண்டகம் (17)

பட்டு கைவளை பலபேர் மெச்ச
வெள்ளி வெங்கலம் வேண்டிய சீதனம்
உற்றிரீகப் பட்டும் ஒளிபெறு பதக்கம்

சீனி சப்பணி சீரது கொடுத்து
இன்னும் சீதனம் எடுத்துக் கொடுத்தனன்
பெட்டியைத் திறந்து பீதாம் பரமும்
பட்டுப் புடவை பல்வண்ணச் சேலை
எண்ணப் போதாத எழுத்துப் புடவை
கம்பிச் சேலை கஸ்தூரி அஞ்சிசுத்து
கம்பிச் சோமன் துப்படி பச்சடமும்
பாகுசேலை சன்னகம்பளிச் சகலாத்து பச்சடம்
ஆரண மறையோன் அனுப்பவே மகிழ்ந்து
மருகனை யழைத்து வரிசைகள் கொடுத்து
வாழ்ந்திரு மென்று மருகனை யனுப்ப
நீரணி மார்பன் திக்கென எழுந்து
மாமன் காலில் மகிழ்ந்துடன் வீழ
போமென் றனுப்பி புதல்விக்கும் அப்போ (18)

## மறையோன் மனைவியைப் பிரிதல்

புத்திகள் சொல்லி பொன்முடி முகந்து
சத்திய மறையோன் தானனுப் பியபின்
மனக் கபடத்தனாய் மாமறை யோனும்
மனைவியுந் தானும் வழிநடந் தனனே
மூன்றாம் சாமம் முடிந்த வேளையில்
மாளமை துடையோன் மாமறை யோன்தான்
மனைவியைப் பார்த்து வசனமே துரைப்பான்
பொன்னே நீகேள் பொழுது மேற்காச்சுது
இந்தக் கானகத்தில் யாம்வந்து விட்டோம்
காதங் காதமரை வழியு மாச்சுது

மெல்ல நாம்போனால் விரவு கானகத்தில்
கள்ளர்கள் பறிப்பார் கடுகவா வென்ன
உடமைகள் எல்லாம் உபயமாய் வாங்கி
அடவுடன் சோமனில் அன்புடன் முடிந்து
இடுப்பினில் சுற்றி இருண்ட கானகத்தில் (19)

நடுப்படச் சுனையில் நல்லிருள் வந்து
இரண்டு பேரும் நல்பசி யுடனே
கட்டமு தெடுத்துக் கடுகெனப் பருகி
பசியது ஆறி பாக்குடன் வெத்திலை
திட்டென வெடுத்து திகழ்பெற வருந்தி
பத்திரைச் சடையான் பாதகம் நிலைத்து
நித்திரை கொண்டு நெடுநேர மானபின்
புத்தி கெட்டவன்தான் பின்மதி யெண்ணி
பெண்தனை விட்டு பொருளது கொண்டு
சத்திய மறையோன் தான்நடந் தானே
புத்தி கெட்டவன் போனது காணாள்
ம(த்)திசேர் முகத்தாள் மலர்க்கண் விழித்து
பத்தர வான பாதகந் தன்னை
சுத்திப் பார்த்து சோர மயங்கி
கொண்ட புருஷன் கொடுமை செய்தானே
என்னுட பர்த்தா எனைவிட்டுப் பிரிந்தார் (20)

ஆருமே லவரும் ஆசை கொண்டனரோ
போனவ ரெங்கெ புனங் கடந்தனரோ
எந்த வூரில் இருப்பா ரோதான்
விதிகா ணங்கே விட்டது நம்மை
நதிசேர் சடையார் நற்பதம் நிலைந்து

அய்யோ தனியூர் அந்த வனத்தில்
மெய்யென்று வந்தேன் விட்டுப் பிரிந்தார்
என்றவள் புலம்பி எவரையும் காணோம்
தனியே யிங்கே தானிருப் பேனோ
பரமே சுவரனே பார்வதி பாகா
எந்தன் தலையில் எழுதி விட்டாயோ
எந்த நேரத்தில் யான்பிறந் தேனோ
தாயுந் தகப்பனும் தவஞ் செய்திலையோ
நான்செய்த பாவம் நாட்டினி லுண்டோ
என்றவள் புலம்பி எவரையுங் காணாள்
மெத்த மயங்கி விதியினை நொந்து (21)

எந்தன் தலையில் எழுதி விட்டாயோ
உந்தன் கோயில் உடைந்து போகாதோ
எந்தன் தகப்பன் இதுவறிந் தாலே
தன்னுட உடமையைத் தான்கொடுப் பாணோ
வாரா வினைதான் வந்து விட்டதுவோ
நான்செய்த தீவினை நல்கிடு மல்லால்
வேறே ஒருவரை வெருப்பவ ருண்டோ
ஈசன் செயலை யெவரறி வாரோ
பிரம்மா விதித்த விதியழிந் திடுமோ
என்று கலங்கி யேந்திழை யாளும்
நன்றெனத் திரும்பி நடந்தனள் ஊரே
காஞ்சி புரத்தில் கடுகெனப் புகுந்து
பாஞ்சாலித் தாயார் பாதத்தில் வீழ்ந்து
தகப்பன் பாதம் தான்தொழு திறைஞ்சி
நிற்கக்கண்டு நீர்வந்த தேதுமகளே யென்று (22)
(9-ஆவது ஏடு காணவில்லை)

## கணவனைத்தேடி தமையனுடன் பழையனூர்ப் பயணம்

-------- வுடனே வாழ்கின்ற நாளையில்
மாதுகை மருந்தால் மயக்கம துற்று
போதவே தளர்ந்து பொருளது தோற்றேன்
என்றவள் சொல்ல யிருசெவி குளிர்ந்து
இப்பொழுது நீரெண்ணுவ தேதுரை யென்ன
பங்குக் காகப் பலப்பல விதமாய்
பொங்கியான் மனத்தில் புத்தி யழிந்தேன்
அப்படி யெண்ண மதுவரு வானேன்
இப்பவே பழையனூர்க் கேகும் நீரென்ன
சகல சம்பத்தும் தான்கொடுத் தருள
இயல்புடன் வாங்கி எடுத்துக் கொண்டு
மைத்துனன் தன்னை வழித்துணைக் காட்டி
வித்தகப் புதல்வியை விரைவுட னழைத்து
புத்திகள் சொல்லி போத மகிழ்ந்து
ஏழு மாதமென் கர்ப்பத் துடனே
தோழனும் கூட்டித் தொடர்ந்துபோ மென்ன. (23)

## திருட்டு மறையோன் இருவரையும் கொல்லல்

காதம் காதமரை கடுசாய நடந்து
போதேவ கானம் புகுந்திருந் தனனே
தூரப் பயணம் தொடர்ந்து வந்ததனால்
ஆர நித்திரை அருள்பெறச் செய்தார்
அந்த வேளையில் அவமதி யெண்ணி

எந்த வகையால் இவர்களைக் கொல்வோம்
என்றே மனதில் எண்ணி மறையோன்
சுத்தி வந்து துணிந்தொரு மனதாய்
இரக்க மில்லாமல் எழுந்துரை மறையோன்
பாரக் கல்லை எடுத்தவர் தலையில்
சேர யிருவரைச் செகுத்தே போட்டு
அடப்பங் கெண்டிகை அவர்க ளுடமையும்
திடத்துடனே பிடுங்கி சேர முடிந்து
கையினில் சூரிகை கடுகென உருவி
வயிற்றைப் பீறி வான்கரு வாங்கி
தெள்ளிய மனத்தான் திருட்டு மறையோன் (24)

## இறந்த இருவரும் பேயுரு கொள்ளுதல்

கள்ளியிற் போட்டு கடிதுடன் சென்றான்
இருவர் சீவனும் எங்கும் போகாமல்
பெருவழி யதனில் பிசாசாய் நின்று
பழைய னூரான் பக்கலில் சென்று
குழையணி யீசர்தன் குமரி பங்காளர்
வெண்மதிச் சடையார் விரைமலர்ப் பாதம்
வண்மைய தாக வணங்கி நினைக்க
செம்மை யானால் திருவுள மிறங்கி
அம்மையப்பரும் நல்ல அருள் கொடுத்தனரே (25)

## புரிசைக்கிழான் மகப்பேறு வேண்டல் :

**விருத்தம்**

செந்தமிழ்சேர் கௌரிபங்கர் திருவருளும் பெற்றபின்பு
பைந்தமிழோர் வேளாளராள் பழையனூர் பக்கமதில்
வந்தவாகுன் றயம்பேட்டை மருவி மாயோன்
அந்தணன்மேல் சனங்களைவைத் தாதரித்துல
கிருந்தனரே (26)

**அகவல்**

திருவளர் பரவும் இருபுய முடையோன்
தெண்டிசை சூழும் தொண்ட நன்நாடன்
உத்தம புருஷன் உபய குலேசன்
அத்தமுங் காசு மெத்த முடையோன்
புத்திரன் வேண்டி புரிசைக் கிழானும்
ஆலங் காட்டில் அரனடி தொழுது
கோலங் காட்டி கொன்றை வேந்தன்தனை
கிள்ளை மேனி கௌரி பங்காளா
பிள்ளை வேணும் பிரானே யென்ன
தெண்டிசை யுலகில் சென்மாந் திரத்தில்
பண்டுநீ செய்த பாவத் தாலே
இல்லைப் பிள்ளை யுனக்கினி யென்ன
மல்லமர் தோளான் மலரடி தொழுது
உந்தன் மனதில் உனதருள் புரிந்து
மைந்த ரெப்படியும் மனமகிழ்ந் திரங்கி
தாரீர் பிள்ளை தம்பிரான் என்ன
என்றவன் கேட்க ஈசனும் உமையும் (27)

# இறந்த இருவரும் புரிசைக்கிழானுக்கு மக்களாகப் பிறத்தல்

இருவர் மனதும் ஏக மாகியே
அவனோட அன்பும் அறிவு மறிந்து
நின்ற பூத சனங்கள் அழைத்து
என்றவன் வயிற்றில் செல்நீ ரென்ன
வாய்மலர்ந் தீசன் மனமகிழ்ந் தருளி
பூந்தார் மார்பர் புரிசைக் கிழானே
ஈந்தோம் பிள்ளை இனிப் போமென்ன
வள்ளிக் கணவர் மாதா பிதாவே
பிள்ளைக் கலியைத் தீர்த்த பிரானே
என்று வணங்கி யிணையடி தொழுது
சென்று திரும்பி திருமனை புகுந்து
செல்வத் துடனே செருக்கி யிருந்தனன்
வாங்கி வந்த வரத்தி னாலே
மாயப் பேய்கள் வயிற்றில் தரித்து
சாயப் பையில் கருவாய்த் தோன்றி
முற்றிய கருவும் முன்னூறு நாளாய்
பற்றிய கருவும் பத்தரை மாதம்
முற்றிய சூலாய் முலையும் பாலாய் (28)

குருட்டை முடத்தைக் கூனைப் பெறாமல்
அரட்டைப் பிள்ளைகள் நவமணி யாகவே
ஆணும் பெண்ணும் அழகுடன் பிறந்து
காணும் கண்கள் களியே கூர்ந்து
செழித்த நகரில் தெருக்கள் தோறும்

இனித்த நெறியும் எண்ணெயும் ஆடி
மதலை தனக்கு மஞ்சன மாட்டி
வாள்விழி தனக்கு மைதனை யிட்டு
கைக்குக் கடகம் காரை பொட்டுடனே
தண்டை சிலம்பு தான்மிக அணிந்து
வெள்ளி அரைஞாண் மிகவே பூட்டி
நெற்றிச் சுட்டி நேறிய பொன்மணி
விரல்தனில் மிஞ்சி மிகவே பூட்டி
நெற்றியில் துலங்க நீணிலா அணிந்து
கடுக்கண் பதக்கம் கைவளை தரித்து
மைந்த னருகே மணிவிளக் கேற்றி
தூங்கு மஞ்சலில் தொட்டிலில் வளர்த்தி (29)

பொன்மணித் தொட்டிலில் போற்றி வளர்த்தனன்
பூந்தார் சோலைப் புரிசைக் கிழானும்
பார்த்து மகிழ்ந்து பரிவுட னிருக்க
பிள்ளை களன்று பிரபல மாகி
அன்னை முலப்பா லதுபோ தாமல்
பின்னை யெழுந்து பெரும்பசி யாலே
அய்யனும் அம்மனும் ஆனந்தக் கடிதாய்
துய்ய நித்திரை சோதித் தெழுந்து
பகவான் போன பதனஞ் சூழலில்
மகாபூ தமாய் வடிவது கொண்டு
இருட்டில் சென்றே எல்லா ரகமும்
உருட்டித் தின்று ஒன்று மாற்றாமல்
சுடர் கொண்டெரியும் சுடலையில் சென்று
பிணத்தைக் கண்டு பிடிங்கித் தின்று
அதுபோ தாமல் அலைந்து திரிந்து
எண்ணா தெண்ணி எழுந்தே ஓடி (30)

அந்த வூரில் ஆயர் பாடியில்
மந்தை நாற்றம் வழியே சென்று
கொழுப்புள்ள ஆடுகள் கொன்றே தின்று
கழுவில் நெய்பருகி கடும்பசி யாறி
உற்று வளர்ந்து உருவங் குறளாய்
சிற்றடி கொண்டு திருமனை புகுந்து
பூமலர் குவிந்த பொன்னின் தொட்டிலில்
கூவாகூவா வென்று கொஞ்சி அழுதாரே
ஆடு காக்கும் மாயன் யெழுந்து
பட்டி காப்பான் பக்கலில் சென்று
நேற்று மின்றும் நெற்றி நூறாடு
சோதனையா கப்போகு தென்றவர் சொல்லக்
கேட்டு மிகவும் கிலேசம தாகி
இதென்ன பாவம் யீசுவரா யென்று
சோதனை பார்க்க தூயோ னிருளில்
விடியு மளவில் விழித்தி ருந்தனரே (31)

## பேயென அறிந்து புரிசைக்கிழான் இருவரையும் காட்டில் விடல்

அப்போ திவர்கள் இருவரும் எழுந்து
பூ(மி) நடுங்கப் பூதமாய் நின்று
போகிறது கண்டு புத்தி கலங்கி
கூளிகள் போன காலடி பிறகே
மாளிகை வாசலில் வந்தே நின்று
நாடிச் சொல்ல நாவெழும் பாமல்
வாடி நிற்கிற வகையது கண்டு

தன்னெஞ் சறியாப் பொய் தானில்லை
என்ன மாய மிதுவென் றெண்ணி
கொடிய வியாகுலங் கொண்டு காராளன்
விடியு மளவில் விழித்தே யிருந்து
பேதமை யாக பிள்ளைகள் எழுந்து
பூத மாகவே போய்வரக் கண்டு
சிவசி வாயம் சிவனே சிவனே
காரண மேனி கருணா கரனே
நீரணி புயனே நிமலா வுன்னை (32)

அடியேன் தானும் அருந்தவஞ் செய்து
பிள்ளைகள் வேண்டி பிரானே உம்மை
தொழுது வணங்கித் தோத்திரஞ் செய்து
மைந்தன் வேண்டி மாலடி தொழுது
உந்த னருளால் உமையவர் வரத்தால்
மைந்தனைத் தந்தீர் மனமது மகிழ
எந்தன் தவசு யீடேறினேன் யென்று
மைந்தனை பெற்று மனமகிழ்ந் திருந்தேன்
ஓராண் டதனில் ஒளிந்தே பூதமாய்
போய்வரக் கண்டு புந்தி கலங்கினேன்
சிவசி வாயம் சிவனே சிவனே
அடியேன் தானும் அருந்தவஞ் செய்து
அந்தணர் தமக்கு அன்னங் களிட்டு
சொர்ணங் கொடுத்து தொழுது வணங்கி
தண்ணீர் பந்தல் தானது வைத்து (33)

நந்த வனங்கள் நயம்பெற வைத்துதவி
............... பலதிசை சாலை யுண்டாக்கி
குளங்கள் வெட்டியும் கோயி லெடுத்து
அன்ன சத்திரம் அனுதினம் விளங்க
அதிக தவங்கள் அனுதினம் செய்து
புத்திரர்க் காகப் புரிசடை யோனே
மெத்த வணங்கி விரும்பினே னடியேன்
ஈசனு மையும் ஈந்தீர் பிள்ளை
பெற்ற பிள்ளை பேதைமை கண்டு
மாயே சுவர னேமகா தேவனே
மெத்த வேண்டின வியாகூலந் தீர
பேயோ யீந்தாய் பிரானே யெனக்கு
என்றவன் சொல்லி எழுந்திருந் தவனும்
வண்டுசேர் புயத்தான் மக்களை யெடுத்து
கொண்டு சென்று கோயிலுக் கெதிரே (34)

சாம்ப லாண்டி சன்னதி தன்னில்
வேம்படி தன்னில் நிழலில் மெத்தவிறக்கி
நீண்ட சடையாய் நீறணி பவனே
சிவந்த மேனிச் சிவனே யெனக்கு
ஈந்த பிள்ளை யிந்தா வென்று
போந்து விட்டான் புரிசைக் கிழானும் (35)

### விருத்தம்

ஆரணியந் தன்னில் ஆங்கவன் விட்டான்
பாரினில் உலகில் பரமேசு வரனே
காரண நாங்கள் கண்களி கூர்ந்து
பூரண மாகப் புக்கிருப் போமே (36)

தேட்டமுடன் பதிதளர்ந்து திருடியுண்டு திரியாமல்
பாட்டொளி சொன்னாவி பாக்கியங்கள் பெற்றோம்நாம்
ஒட்டியதேர் புரிசைகிழான் பழமுள்ள காட்டிலே ஒட்டினான்
வீட்டிலுந்தா னிழலடர்ந்து வேம்படிதான் மிகவழக்கே
(37)

சிறந்தபுகழ் வளநாட்டில் சீர்மருவுங் கங்கைபங்கன்
பிறந்ததலை சடையானும் பிள்ளையென்று
யீந்ததைத்தான்
அறிந்துகொண்டு புரிசைக்கிழான் ஆரணியந்
தன்னில்விட்டான்
உறைந்துபல வுயிர்பறித்து உண்டிருப்போ மண்ணாவி
(38)

## இருவரும் நீலன் - நீலி என்னும் பேயாகி வாழ்தல்

இலகுகதிரோன் எரிக்கும் ராச்சியத்தில் எங்குமுள்ள
அலகையென்னும் பேய்களுக்கு அஞ்சா திருமுகந்தான்
நலமிகுசே ரோலைக்கண்ட நாழிகையில் வருகவென்று
உலகமெல்லாம் ஓலைதனை உற்றாளாய்ப் போகவிட்டான்
(39)

ஓலைகண்ட அந்நேரம் உலகிலுள்ள பேய்களெல்லாம்
மூலமான பேய்கள் மொண்டிப்பேய் மூக்கர்பேய்
கோலமான நெடும்பேய்கள் குட்டைநெட்டை கூன்பேய்கள்
சாலமுடன் பேய்களெல்லாம் தான்கூடிக் கொண்டதுவே
(40)

நெட்டைநெடு வேம்படிதான் நீலனுக்கு நிழலாக
பட்டணமா யலங்கரித்துப் பலபேய்கள் சேவிக்க
இஷ்டமுட னிருவருமாய் ஓரிடத்தே அண்ணாவி
முட்டவினி நாமிருக்க முறைமையல்ல வென்றுரைத்தாள்
(41)

செடிகள்தோ றும்புலிவாழ் செங்காட்டில் சென்றுபுக்க
கொடியசெம் பருந்தாலே கோலமுடன் கோட்டையிட்டு
கடியபூதம் மனங்களிப்ப கருங்காக மாளிகையாய்
பூடைசூழப் பெண்பேய்கள் போற்றிசெய்ய
வீற்றிருந்தான் (42)

நீலனுடன் ஒருகோடி நெடும்பேய்கள் சேவிக்க
சீலமுடன் ஒருகோடி சிறிதுபேய்கள் சேவிக்க
கோலமுடன் தாடிப்பேய் கொன்றுநிணச் சதைகள்தின்று
சூலமுடன் திரைநடுவே துரையாக வீற்றிருந்தான் (43)

## நீலனின் இறப்பு

### விருத்தம்

பாடிக் கொண்ட வண்டாடும்
பழைய னூரில் வேளாளர்
நாடிச் சென்றே அம்மரத்தை
நல்லதிரு நிலைக் காலாமென்று
ஓடித் தாடிப்பேய் நீலன்
உலாவித் திரிந்து வருமுன்னே
வேடிக் கையாக அவனிருந்த
வேம்பு தனைவெட் டினரே (44)

நெடிய மரத்தை வெட்டினதை
    நீலன் முன்னே பேய்சொல்ல
வெடியு முன்னே ஓடிவந்து
    வேம்படி யைத்தான் பார்த்து
படைதிர நின்ற திர்ந்து
    படைவீ டளித்தான் தன்னையின்று
முடிய றுப்பேன் கொடியசினம்
    முடிப்பேன் இரத்தம் குடிப்பேனே (45)

பிரியாத் துணையே பெரும்பேய்கள்
    பேசா துறங்கும் சிறிதுபேய்காண்
பரிவா ரம்மே நம்முடைய
    படைவீ டளித்தான் பதிநோக்கி
வருவார் போவார் தனையோடி
    வளைந்தே ஓடி ஒளிந்தாலும்
குருதி பருகி நிணச்சதையை
    குடிப்பேன் இரத்தம் குடிப்பேனே (46)

**அகவல்**

அவன்நீலன் நாடிப் பழசைதிசை தேர்கலி
உமையொரு பாகன் உடையோர்க்கு
உகந்தே நெய்யால் அமுதுபடி கொண்டு
சிவனா மறையோன் வரவு கண்டு
செறித்தான் குத்திப் பறித் தானே (47)

## விருத்தம்

சிறுத்த இடையாய் உமைபாகர்
சிவனே சிவனேயென......
எரிக்கும்நிலா வைமுடித்தாய் சிவனே
ஈசாமுறை வாசிவனே சிவனே
வெறிக்கும்கொன் றைச்சடையாய் சிவனே
மெத்தக் குத்திமெய் தீண்டி
பரித்தா னீலன் அமுதுபடி
பாராய் பாராய் பாராயே (48)

தீண்டோள் சைவச்சிவன் நகைத்து
சினத்துநெடுகித் துயரங்கொண்டு
வண்டார் தோளான் மறுகண்டன்
மகனை யன்று பயமுறுத்தி
பண்டே இயமன் உதைப்பட்ட
பாடுங் கேடும் அறியானோ
குண்டோ தரனே எழுந்திருடா
கொடிய நீலன் பொடிபடவே (49)

கூர்மழு கூர்வேந்தன் அருள்செய்ய
குண்டோ தரனும் எழுந்திருந்து
சீர்பெற முன்னே தெண்டனிட்டு
திருநீற் றுடனே அருள்பெற்று
தார்புனை மார்பன் குண்டோதரன்
தடியொடு சுரிகை தானெடுத்து
போர்பொரு வெனவேநீ லன்முன்னே
புலிபோல் எதிர்த்து வந்துநின்றான் (50)

கண்டான் நீலன் கண்சிவக்க
கடிய கோபந் தானுடனே
விண்டார் வாயால் அனல்சொரிய
மீசை துடிக்க வெஞ்சினமாய்
குண்டோ தரனும் நடுங்கிடவே
கோடை யிடிபோல் கொக்கரித்து
வண்டா ரடவிமரம் பிடுங்கி
வந்தா னெதிரே வந்தானே (51)

வட்ட மிட்ட கடலுலகில்
மலையும் மலையும் எதிர்த்தார்ப்போல்
கிட்ட விட்டால் பூமிதேவி
கிடுகிடு எனநடுங் கிடவே
முட்டி யொட்டித் தட்டியவன்
மோத வந்தான் முடிமேலே
கட்டி யொட்டிக் கொக்கரித்து
கடுஞ்சின மாய்ப்பொரு தினனே (52)

ஆக்கிரமாய்க் கொக்கரித்து அதிர்ந்துநின்று நீலனைத்தான்
மிருத்ததொரு குண்டோதரன் விலங்கிவந்து வலமாக
அக்கணத்தில் அவன்சுரிகை ஆயுதங்கள் தனைநாடி
குத்திவிட்டான் நீலனைத்தான் குடல்சரிய விழுந்தானே
(53)

கரியமலை போல்விழுந்தான் கழுகுகாகம் கண்பிடுங்கி
குருதிவெள்ள மிகப்பெருக கொண்டகொண்ட வாயெழும்ப
நரியினங்கள் ஊளையிட நாயினங்கள் குடல்பிடுங்க
பரியதலை எறும்பெரிக்க பட்டான்நீலன் பட்டானே(54)

## நீலனின் இறப்பை நீலி அறிதல்

கலைசேர் கனாக் கண்டாள்
கடுகி வினைதான் வரக்கண்டாள்
நிலைவேம் படிதான் விழக்கண்டாள்
நீங்காப் பழிதான் வரக்கண்டாள்
மலைபோல் நீலன் படக்கண்டாள்
மான பங்கம் வரக்கண்டாள்
கொலைசேர் விழியாள் -----
கொள்ளிக்கட் டைகொண்டே வாராளே. (55)

இலைவேம் படிவாழ் அண்ணனுக்கு
ஏதுக்குறை யோகாணே னென்று
முலைமேல் விழுங்கண் ணிருதிர
முகத்தால் ரத்தம் துள்ளிவிழ
தலைமேல் குழலைத் தான்விரித்து
தமையன் பதியை திசைநோக்கி
கொலைசேர் வழியாள் வெகுகோபம்
கொண்டே வாராள் வாராளே (56)

காட்டுடனே துணைபெரிய கரும்பேய்கள் கூட்டமிட்டு
நாட்டினில்தான் அண்ணரும் நல்லதொரு வேம்புக்கு
பாட்டுடனே யிளவோலை பலபேய்கள் தானெழுதி
ஓட்டமுடன் சிலபேய்கள் ஓலைகொண்டு ஓடியதே (57)

சுத்திநின்ற பேய்கூடி சுருள் ஓலைகைக் கொடுத்து
செத்துப் போனார் அண்ணரென்று சேதிசொல்லத் தான்நீலி

குத்திக் கொண்டாள் கொங்கையின்மேல் கோபமிகவே
தானெழும்பி
கத்திக்கத றிப்போய்நீலி கண்டாள் தமையன் பிணக்கோலம்
(58)

பட்டுக் கிடந்த அண்ணனைத்தான்
பார்த்துத் துடித்து கைதலை
கட்டிக் கொண்டாள் மேல்விழுந்தாள்
கண்ணுள் நெருப்புப் பொரிபறக்க
முட்டிக் கொண்டாள் நிலமதிர
முகத்தில்மிக வும்அறைந்து கொண்டாள்
வட்ட மிட்டு சுத்திவந்து
மருண்டாள் விழுந்து புரண்டாளே (59)

## நீலியின் புலம்பல்

### துயர்ச் சிந்து

அடித்தாள் தலையை நிலத்தோடேதான்
அறைந்தாள் முகத்தைத்தன் கையாளே
எழுந்தாள் மலைபோல் விழுந்தாளே
இடித்தாள் மார்பில் புடைத்தாளே
கடித்தாள் பல்லை நெறுநெறென்ன
கரியகுழலை விரித்தாளே தான் (60)

## நீலியின் சபதம்

### விருத்தம்

அண்ணன் பட்டபடு களத்தைக்கண்டு
அலறி விழுந்து எழுந்திருந்து
பொன்னின் மேனிஅண்ணர் தனக்கு
பூமிமேலே கிடக்க நன்றோ
என்ன பழிதான் செய்திருந்தோம்
ஈஸ்வர னேஉனக் கபயம்
அண்ணர் தன்னைக் கொன்றபேரை
அப்பால் போகவிடு வேனோநான்
பின்னு முன்னும் பாராமலே
பிடுங்குவேன் குடல்கள் தன்னை
நானு மில்லா வேளைகண்டு
நமனார் போலவே வந்துகொன்றார் (61)

## மறுமையில் நான்மறையோன் கரந்தை செட்டி மகனாதல்

(21, 22, 23 - ஆகிய இம்மூன்று ஏடுகள் காணவில்லை)

### விருத்தம்

நிலைபெறவே சொல்லுன்கிறோம் நீயொன்றுக்கு
மஞ்சாதே
தலையெழுத்தும் தப்பாது சாத்திரமும் பொய்யாது
கொலையிலிவன் மாளுவன்காண் குறைவேந்தர் தாமறிய
அலகுடைய சுரிகையொன்று அவன்கரத்தில்
வேணுமென்றார் (62)

மெய்கலங்கி நாகரந்தை வேதியரை அடிதொழுது
தெய்வமே என்னுடைய சிறுவனுயிர் போகாமல்
வையகத்திலே நூறு வயதிருக்க வேணுமென்று
துய்யவரே நினையுமென்று தொழுதுதனம் சொரிந்தனனே
(63)

வீற்றிருந்த வேம்படியில் வேதியர்கள் தான்கூடி
ஏற்றரிய தணலெழுப்பி யாகசாலை தான்வளர்த்து
சாத்திரத்தில் ஒருசுரிகை தப்பாதே வருகவென்று
பாத்திருக்க நிறமுடைய பத்திரமும் தோன்றியதே (64)

சூரியனை அடிதொழுது சுரிகையொன்று தானீந்து
பேர்பெரிய குமாரனுக்கு பிராணவதை வாராமல்
வீரமுடனே வந்த வேம்பலகை கைவிட்டாள்
பாரறிய சொல்லுகிறேன் படுகளமுந் தப்பாதே (65)

மட்டமருந் தோளுடையான் வணிககுலனாம்
கரந்தைசெட்டி
சொட்டை பெற்றபின்பு செருக்குடனே மலைபுகுந்து
தொட்டில்கால் தன்னுடனே சுரிகைதனைத் தூக்கிவைத்து
பெட்டியுடன் தனமெடுத்து பிராமணற்குத்
தானமிட்டான் (66)

அடையில்நதி கடலோடும் ஆயிரஞ் சேரங்குகப்ப
உடையசெட்டி குமாரனுக்கு உலகறியத் திருநாமம்
திடமுடைய தனஞ்சொரியுட் தேசிகனா மெனவழைத்து
கடல்வயல்சூழ் கச்சியிலே தனமளித்தான் தமிழோர்க்கே
(67)

பாடிமணி குலமேவும் பத்திரதே சிகனென்று
நாடறியப் பேருமிட்டு நாகரந்தை மகனாற்கு
கோடிதானம் பரியவிட்டு கொற்றந்தை மகளாரை
காடுடைசூழ் வாழை கலியாணம் பண்ணலுற்றான் (68)

## நாகரந்தை செட்டிமகன் தேசிகன் - கொற்றந்தை மகள் மணம்

நாற்றுவயல் கச்சியில் நாகரந்தை மகனாற்கு
வெற்றிபெறும் பலபணியும் விலைமதிக்கக் கூரையிட்டு
கொற்றவனுந் திரைதோளான் கொற்றந்தை மகளாரை
சித்திரமாய்த் தாலிகட்டி திசைமதிக்கக் கொண்டனனே
(69)

## செட்டியின் அறிவுரை

மெத்தபுகழ் நாகரந்தை விற்பனவேள் தேசிகனை
பத்தியுடன் வரவழைத்துப் பாரறியச் சொல்லுகிறேன்
புத்திசொல்லிப் பழையனூர்க்குப் போகாதே தனிவழியே
நித்திரையில் பத்திரத்தை நெகிழாதே யெனமொழிந்தான்
(70)

### விருத்தம்

கோள்சொல்லித் திரியாதே குருவசன மறவாதே
மண்ணோரஞ் செல்லாதே வழக்கழிவு பேசாதே
நன்றிசற்று மறவாதே நல்லோரை யிகழாதே
ஊர்ப்பயணம் தனிவழியே ஒருவனுமாய்ப் போகாதே (71)

ஊருடன் பகையாதே ஒருசொல்மொழி தப்பாதே
நாவிரண்டு பேசாதே நல்லசனம் தப்பாதே
அஞ்செழுத்தை மறவாதே அரன்பாதம் மறவாதே
உண்மைதனை மனையாளுக் கொருநாளும் சொல்லாதே
(72)

விருந்திருக்க உண்ணாதே வேதியரைத் தள்ளாதே
திருநீற்றை மறவாதே தேசிகரைப் பழியாதே
------------- மூர்க்கருடன் சேராதே
பிறதாரம் விரும்பாதே பெண்வார்த்தை கேளாதே (73)

------------ கேடுதனைச் சொல்லாதே
பாம்புதனைக் கொல்லாதே பழையனூர்க்குப் போகாதே
சோம்பருடன் கூடாதே துரைகளைக்கை நெகிழாதே
குண்டுணியை நம்பாதே குருவின்தாள் மறவாதே (74)

தோற்பதுகொண் டம்பலத்தே சொல்சபையில் ஏறாதே
சிற்றின்ப குணமுரைக்குஞ் சிறியாரோ டிணங்காதே
வெள்ளாட்டி தன்னுறவு (வேரூரிலும் கொள்ளாதே)
பெற்றதாய்தனை யெதிர்த்து பேசாதே ஒருநாளும் (75)

பிறதாரம் விரும்பாதே பொருள்கொடுத் (தழியாதே)
வழித்துணைதான் யில்லாமல் வனம்புகுந்து போகாதே
நம்பினாரைக் கெடுக்காதே நாவிரண்டு பேசாதே
இந்தபடி நடவுமென்று இன்பமுடன் தானுரைத்து
புத்தியுந்தான் மகனாற்கு-புகழ்ந்துரைத்தான்
செட்டியுமே (76)

வருத்தமுடன் மகன்தனக்கு வகையுடனே
புத்திசொல்லி
இருக்குமந்த வேளையிலே அயனெழுத்தின் படியாலே
கருத்தழிந்து நாகரந்தை கனகதானம் தானளித்து
யிருக்குமந்த செட்டியாரும் எமலோகம் சேர்ந்தானே (77)

திருத்தமுட னாகரந்தை செட்டியார் செத்தபின்பு
பொருத்தமுட னேபலரும் பெரியதுக்கம் மாற்றியபின்
உரைத்தபுத் தியால்நமக்கு ஒருபலனும் கண்டதில்லை
வருத்தமாகவே தானும் வியாபாரம் தானினைத்தான் (78)

## தேசிகன் பொருள்தேடிப் பழையனூர்ப் பயணம்

சகலதுக்க மானதெல்லாம் தலத்திலுள்ளோர் கொண்டாட
வகையுடனே தானடத்திபின் சலிப்புத்தா னாறியபின்
துகைநெகிழான் பத்திரத்தை தூக்கியதைத் தானெடுத்து
திசைநாலும் போய்வரவே தேசிகனும் நினைவுகொண்டான்
(79)

வள்ளையொத்த குழல்மடவார் மகனாகநாம் பிறந்தோம்
தெள்ளுதமிழ் கச்சியில்வாழ் செட்டியனும் நாகரந்தை
பிள்ளையென்று பெற்றபின்பு பேர்பெறவே தனந்தேட
வள்ளுதொண்ட பயல்விட்டுப் பயணமென்று கூறினானே
(80)

மனம்பெரிய நாகரந்தை மரித்தபின்பு தேசிகனும்
தனஞ்சொரியும் கச்சிவிட்டு தன்கைச்சுரி கைதானெடுத்து
மனம்பெறவே தனந்தேட மனைவிக்கு புத்திசொல்லி
வனம்புகுந்து தனிவழியே வடதிசையில் போகலுற்றான்
(81)

## நீலி வழிமறித்தல்

சந்தனமென் கொங்கைநல்லாள் தக்கோல மடவார்பின்
தொடர்ந்து தேசிகனை பின்னவர்கள் வருவதுகண்
டிருந்துநுதல்ப் பெண்ணணங்கை யாவருமே நில்லுமென்று
வந்துவனம் புகுந்தனன் மகாபூத மெதிர்காணவே (82)

நன்றாக தன்பதிக்குள் நாயகன்போல் இவன்தானே
எண்ணாயிரங் குடிக்கும் இனத்தோர்கள் தான்போலே
பெண்ணாகி அழகியிவள் பிஞ்சுமுலை பக்குவமாய்
கண்ணாலே தாம்மிரட்டி கருணையினால் நகைத்தனளே
(83)

அறம்வளர்த்த பின்மருங்கும் அடியிணையும் குவிமுலையும்
உரையழித்த வாள்விழியும் ஒளிமிகுந்த வெண்ணகையும்
பிறைவளைத்த வளைநுதலும் பேரிளம் பெண்ணாகவச்
சிறுமுகத்தால் அழகியவள் செட்டிமுன்னே தோன்றினளே
(84)

## நீலி - தேசிகன் வாதம் :

### சந்த விருத்தம்

#### நீலி

பழகதலி கமுகுகண்ணி பரந்தநாடு சூழ்கின்ற
கனகஞ் சொரியுமார்ப் கச்சிவணிகன் றன்மகனே
அனேககாலம் உனைத்தேடி அடவியெல்லாம்
திரிந்துவந்தேன்
நினைவின்படியே நீவந்தாய் நினைத்தகாரிய முடிப்பேன்
(85)

#### தேசிகன்

ப(ன)ஞ்சாரு மொழியாளைப் பார்த்துநின்று தேசிகனும்
தனஞ்சாரும் குழலாளே தன்னந்தனிக் காட்டில்
பெண்சாதி நிற்பாளோ பேய்ப்பெண் ணேநீபோடி
கண்சாறு பெருவனத்தில் கால்விறுகாய் நடக்கலுற்றான்
(86)

#### நீலி

பண்ணுதமிழ்ப் பாராட்டும் பழனமிடுங் கச்சியிலே
கன்னியர்கள் கண்டாசை காமநோய் மயல்தீர
என்னுடனே நீகூடி எனைத்தழுவ திலையாகில்
வன்னியின்மேல் மெழுகாவேன் மாதருடன் கூடேனே
(37)

#### தேசிகன்

அல்லமருங் குழலாளே ஆருமில்லா தனிக்காட்டில்
நல்லவளாய் வந்தாலும் நானுமுன்னை நம்புவனோ

கொல்லவரு விழியாளே கூடாதே என்னருகே
நில்லுமினி வரவேண்டாம் நேரிழையே எனமொழிந்தான்
(88)

குற்றமிட்டு செட்டிதனைக் கொல்லவென்று சினமாக
பத்திவிழி ரண்டருகும் பலபேய்கள் புடைசூழ
வெற்றிலைப்பாக் கென்றுசொல்லி விலைகூறி
விற்கலுற்றான்
துற்றமலர்க் குழல்விரித்து தூற்றிமயிர் ஆற்றினளே (89)

## நீலி

இடையழகும் உடையழகும் ஏதவொண்ணாப் பேரழகும்
புடைபரந்த குவிமுலையும் பொன்னிறம்போல் ஒடியமுகும்
பிறைகவித்த வாள்முகமும் பாராதே தலைகவிழ்ந்து
கடைகடந்து போமளவும் கடியவவள் போகலுற்றாள் (90)

முருக்கிநின்ற பூங்குழலாள் முன்னேபோய்
வளைந்துகொண்டு
வருகின்ற எவ்வூர்க்குப் போகின்றீர் நில்லுமென்று
பொருள்தேடப் போறீராய்ப் போகாதே என்னிடத்தில்
இருமிங்கே நானுமக்கு யிரண்டுகுடம் பொன்தாரேன்
(91)

## தேசிகன்

சிந்தைமிக நொந்துருகி திகைத்துநின்ற தேசிகனும்
வந்துவிட்டா ளோபிறகே மனையாட்டி என்றுசொல்லி
இருந்துவிட்டா ளப்பேதை யிவள்தான் அல்லவென்று
சந்துவிட்டு போகலுற்றான் சாச்சுவந்தாள் பேச்சியென்றே
(92)

சித்திரம்போல் பந்தலிட்டு சீர்பெறவே மணல்பரப்பி
நித்திரைக்கே யிடங்கள்பண்ணி நேரிழையாள் நின்றிநிலை
குத்திரமே யென்றுசொல்லி கோலமுடன் உரைகழற்றி
பத்திரத்தைத் தான்வீச பந்தலில்போய் யோடியதே (93)

செந்துவர்வாய்க் கன்னியைப்போல் திரண்டமுலை
பெண்ணாகி
பந்தமுன்னே வந்துநின்று பயமுறுத்திப் பழிவாங்க
கொந்தலரும் குழலாளே கூடிக்கூடி மயங்கியவள்
வந்துமுன்னே வளைந்துகொண்டு வழிமரித்துக்
கொண்டாளே (94)

**சிந்து**

சூல்நிறைந்த சங்கி னங்காள் - மெத்த
சூழ்கின்ற கச்சிவள நாடர்
ஏலமுண்டு நீர்தான் குடித்து - இப்ப
இளைப்பாறியே போவீர் என்றாள்
கட்டிலுண்டு மெத்தை யுண்டு - நல்ல
காசுண்டு கற்பூரந் தானுமுண்டு
பட்டுமுண்டு பணியு முண்டு - நல்ல
பாலுடன் சோறு பழமுமுண்டு (95)

இஷ்டமாகவே வீடும் உண்டு - இன்றைக்கு
ஏகபோகமாய் வாழ்ந்திருப் போம்
செட்டியாரே வாருங் காணும் - யிந்த
தேசம்போய்த் தேசம்திரிய வேண்டாம்

சந்தனம்புனுகு சவ்வாது முண்டு - நல்ல
சப்பிரமஞ்சமும் மெத்தை யுண்டு
பந்துபோல முலைப் பெண்களுண்டு - யின்று
பாவிப்போம் வாருங்காண் செட்டியாரே (96)

**தேசிகன்**

செட்டியாரே வாருங் காணும் - யிந்த
தேசம்போய்த் தேசம் திரியவேண்டாம்
கட்டில் வேண்டாம் மெத்தை வேண்டாம் - உந்தன்
காச்சுண்டை கற்பூரம் தானும் வேண்டாம்
பட்டும் வேண்டாம் பணியும் வேண்டாம் - உந்தன்
பாலுடன் சோறும் பழமும் வேண்டாம்
இஷ்ட போகமாய் வீடு வேண்டாம் - உனக்
கென்கிட்ட காரிய மேது சொல்லாய் (97)

**நீலி**

காரியமுண்டு கணக்கு முண்டு - உன்னைக்
கண்டபொழுதே நான் ஆசையானேன்
கூரிய சுண்ணாம்பு நீர்தாரிர் - இப்ப
கூறும்படி யதைநான் சொல்லக் கேளிர்
வேரில் பழுத்தபலாச் சுளையும் - நல்ல
வெண்ணிற லிறங்கிய தேனுடனே
நீருமிப் போதே பசியாறி - யெந்த
னாசையை நீரிப்பத் தீராயே (98)

**தேசிகன்**

சுண்ணாம்பு தானுமில்லை - போடிச்
 சூளையரைச் செட்டி தீண்டுவனோ
எண்ணாது நீர்போடி - யிந்த
 உப்பையிட்டுப் புளி தின்னாமல்
தின்னாமல் போவேனோ - யிந்தத்
 தேசத்துப் பேய்களைப் பந்தலிட்டு
நண்ணாகமணல் பரப்பி - யிந்த
 நாலுபுறமும் சலங்கள் வைத்து
பண்ணார்ந்த செட்டி மகன் - யிந்த
 பந்தலில் வந்து யிருந்தளவில் (99)

**நீலி**

பின்னாலே வளைந்துகொண்டு - யிந்த
 பேய்களும் நானும் பிடிப்பேனே
பிடித்தால் விடல்அரிது - அந்த
 பின்னையு மந்த நிழலரிது
விரித்தாய்நீ பத்திரத்தைப் - பழி
 வாங்குவேன் நானினி விடலரிது
விரித்தாய் நீ பத்திரத்தைப் - பழி
 வாங்குவேன் நானிந்தப் பார்தனிலே(100)

## விருத்தம்

**தேசிகன்**

பாரறியப் பிறந்தேன்நான் பதினாறு வயதாச்சு
தீரவேதிரிந்து விட்டேன் தரிசனத்தில் நான்கானேன்
பேரறிவாள் போலேநீ பிதற்றுகிறாய் பேயேபோ
ஊரறியேன் பேரறியேன் ஊதாரி நீபோடி (101)

## சிந்து

### நீலி

விடுவேனோ பழிமுடிப்பேன் - உம்மை
விட்டுப்பிரிந்துநான் போகாமல்
செடியிலும் உனைத்தொடர்ந்து - நான்
செட்டிச்சியாகவே வேஷங் கொண்டு
குடியாதே போனாலும் - உன்னைக்
கூடுஞ் சபைதனில் தானிருத்தி
விடியாது முன்னே - நான்
வீண்பழி வாங்கி விடுவேனே (102)

பார்த்திருந்தேனா னும்மையல்லோ - அந்த
பண்டைய னூரில் அறியீரோ
காத்திருந்தேனிப் போது - எந்தன்
கண்ணின் முன்னே அகப்பட்டீரோ
அறிவீரோ செட்டியாரே - அந்த
ஆவிக்கரையிலே தங்கம் பண்ணி
குறியாகவே கல்லெடுத்துத் - தலைமேல்
போட்டவர் நீரல்லவோ செட்டியாரே (103)

விடுவேனோ பழிமுடிப்பேன் - உம்மை
விட்டுவிடு வேனோ செட்டியாரே
செடிமீதினிலே திரிந்துவந்த - எங்கள்
செத்துப்போன அண்ணர் பழிமுடிப்பேன்
கொடியாளோட மனக்கவலை - யீடேற
கொடிய ஜென்மமெல்லாம் விட்டாற
விடியாது முன்னே - நான்
வீண்பழி வாங்கி விடுவேனே (104)

## விருத்தம்

### தேசிகன்

பருவரைசேர் மொழியாளே பழிகாரீயென் சொன்னாய்
ஒருவரையுங் கொன்றதில்லை உலகிலுள்ள சிவனறிவார்
மொழிவதெல்லாம் அநியாயம் மோசமே சொல்கிறாய்
வழியைவிடாய் நான்போக வனநீலி யென்றுரைத்தான்
(105)

## சிந்து

### நீலி

வழியும் விடுவதில்லை - உந்தன்
வாணாளை வாங்காமல் நானும்போகேன்
எளிதோ எங்களண்ணர் - பழிக்காக
எழுபது வேளாளர் தாம்மாளவே
பழிவாங்க வேண்டுமிப்ப - உன்னை
பற்றித் தொடர்ந்தது மறியாயோ
பொழுதாய் விழுமளவும் - உன்னை
போகவிடேன் செட்டி கண்டாயே (106)

### தேசிகன்

ஓட்டாரமே ஒட்டுகிறாய் - இப்ப
ஒன்றித் தனிவழி போகயிலே
மட்டாரும் பூங்குழலாள் - நீவர
வேண்டாம் வாளால் வீசுடுவேன்

நிஷ்டூர வாசகமே - இப்ப
நீபோடி வந்து மறியாதே
கட்டாகவே பேசுகிறாய் - வந்து
கடக்க வழிவிட்டு நில்லாயே (107)

**நீலி**

நில்லாய்நீ என்றுசொல்லி - யிப்போ
நீஷ்டூர வார்த்தையது பேசி
சொல்லாதே எந்தனிடம்நீ - இப்ப
சொன்னது மிப்போது விட்டுவிடேன்
வல்லோர்கள் காராளர் இப்போ
வம்பு செய்தபழி வாங்காமல்
மல்லாரும் திண்புயனே - செட்டி
வாங்கி விடுவேன் பழிதானே (108)

## விருத்தம்

**தேசிகன்**

சிந்தைமெத்தவே கலங்கி தேசிகனார் யென்சொல்வான்
வந்துவிட்டா ளோபிறகே மாபாவி தானெனவே
இந்துவிட்ட முகப்பேதை இவள்தொடர்ந்தா ளிப்போது
அந்திவிட்டுப் போமளவும் அதட்டிநின்றாள் பேச்சியென்றே
(109)

**நீலி**

கால்பரவும் பந்தலிட்டு கனநீழல் உண்டாக்கி
கோலமுடன் தண்ணீரும் தானுமங்கே உண்டுபண்ணி
கோலமுடன் வாருமிங்கே குளிர்ந்தநீர் தானுமுண்டு
சீலமுடன் நீர்குடித்து இளைப்பாறிப் போகுமென்றாள்
(110)

**தேசிகன்**

வந்துமறித் தாயாகில் வாளால் வீசிடுவேன்
உந்தனைநா னெண்ணாமல் உன்முகத்தைப் பாராமல்
சந்தனையும் பழசைநகர் தன்னகரந் தானோக்கி
கந்தணியும் செட்டிமகன் கால்கடுகாய்ப் போகலுற்றான்
(111)

**நீலி**

அந்தமுடன் கொக்கரித்து அபயமென்று எழுந்திருந்து
சிந்தைமிகவே கலங்கி திகைத்துநின்றே நீலியவள்
விந்தைவிழி யனல்பறக்க மொட்டியவள் ஆர்ப்பரித்து
வந்துமுன்னே வளைந்துகொண்டு வழிமறித்துக்
கொண்டாளே (112)

**தேசிகன்**

கொம்மைவரி முலையாளே கூற்றுவன்போல் வந்துநின்றாய்
எம்மையுயிர் வாங்குகைக்கோ இவ்வண்ணங்
கொண்டாய்நீ
உன்னையினி நம்புவனோ உரைகழற்றிப் பத்திரத்தால்
செம்மையுதி ரஞ்சிதற சினமுடிப்பேன் வழியைவிடாய்
(113)

**நீலி**

செட்டிமக னாயிருந்து சேவகமே பேசுகிறாய்
வெட்டியென்னைப் போட்டாலும் விட்டுவிடேன்
நானுமுன்னை
முட்டவுனைத் தொடர்ந்து முடியறுத்தென் சினந்தீர
பிட்டுநிணந் தின்னவந்த பேய்ச்சிஉனைப் பிழைக்கவிடேன்.
(114)

**தேசிகன்**

வீட்டைவிட்டு வரநிமித்தம் விடிகாலை பலதிசையில்
கூட்டமிட்டே கோட்டானும் கூவினது பொல்லாது
காட்டைவிட்டுப் போமளவும் கலங்கிமெத்த தவிப்பானேன்
வாட்டவிட்ட வழியாளே வலினும்விடாய் மாபாவி(115)

வாவிசூழ் கச்சிவிட்டு மனையாளை யொழித்துவந்தேன்
பாவிநானென் றுசொல்லிப் பாதகமாய் நின்றழுது
காவிசேர் விழியாளே கயிலையா னிடத்திருக்கும்
தேவியிரு திருவடியை சிந்தையுள்ளே நினைந்து
கொண்டான். (116)

மனைக்கோட்டுங் குழல்நீலி மாபாவி வரும்வழிக்கே
துணைக்கூட்டி வாராமல் தொக்கவந்தேன் என்னுயிரை
பனைக்கோட்டு இணைமுலையாள் பதிவிரதை
தனைப்பிரிந்து
இணைக்கூட்டம் விட்டுவந்தேன் எழுத்தின்படி
யித்தனையோ (117)

**நீலி**

தேங்கிவரும் புகழானே தேசிகனே நீகேளாய்
ஏங்கிமிக நின்றாலும் எந்தமையன் பட்டபழி
வாங்கியல்லால் உன்னைவிடேன் வயல்சூழும் பழசையில்
சாங்குறிகாண் உந்தனுக்கு தலையெழுத்துந் தப்பாதே

அட்டகிரி யெட்டும் அதிரவே ஆர்ப்பரித்து
செட்டிமக னாகவந்த தேசிகனே நீகேளாய்

விட்டுவிடேன் உன்னையினி வேளார் பழசைநகர்
பட்டணத்தே போனாலும் பழிவாங்கிக் கொள்வேனே
(119)

## இருவரும் பழையனூரை அடைதல்

**தேசிகன்**

மிஞ்சியகைப் பத்திரத்தை வீசியவன் தானெடுக்க
அஞ்சியஞ்சி பயமாகி அவனருகே வரப்பயந்து
வஞ்சியர்போல் பின்னிடையை வழிவிட்டு விலகிநின்றாள்
செஞ்சொல்மறை பழையனூர் திசைநோக்கிப்
போகலுற்றான். (120)

**நீலி**

விடமதிர நிலமதிர வீசியே பத்திரத்தை
பிடிபடாமல் போகிறவனை பின்தொடர்ந்து நீலியவள்
மடல்சூழும் பழசையிலே மன்றம்பலத்தில் வந்துநின்று
துடையுதடு வெடுவெடென துடித்துநின்றே
அபயமிட்டாள் (121)

விண்ணதிர மண்ணதிர வேர்ப்பட்டுந் தானதிர
கண்ணின் மணிசிவக்க கள்ளியிவள் பின்தொடர்ந்து
அண்ணல்பெரி யோரிருக்கும் அம்பலத்தில் வந்துநின்று
எண்ணரிய துக்கமுடன் என்முறையைக் கேளுமென்றாள்
(122)

### வசனம்

பேர்பெரிய நாட்டவர்க்கு அபயம், பூமிபாலகர்க்கு அபயம், குறைகளையும் வல்லவர்க்கு அபயம், கொளுமீதுள தூயவர்க்கு அபயம், மனுமுறையே கேட்ப்பவர்க்கு அபயம், மனுநீதியுள்ளவர்க்கு அபயம், கறைமிடற்றண்ணல் வழி நிற்பவர்க்கு அபயம். காராளர் அனைவருக்கும் அபயம்.

## பழையனூர் வேளாளர் குறை கேட்டல்

### விருத்தம்

மஞ்சாருங் குடைமனையிற் மார்பதள வேளாளர்
அஞ்சாதே யென்றுசொல்லி அம்பலத்தில் இடங்கொடுத்து
எங்கே யிருந்து வந்தீர் ஏதுகுறை சொல்லுமென்றார்
நஞ்சாரும் வழிபூதம் நாட்டவரை ஒட்டுமென்றான்
(123)

தெள்ளுதமிழ் அம்பலத்தில் செட்டிமொழி கேட்பளவில்
கள்ளிதனைப் பிள்ளையென்று கைதனிலே தானேந்தி
கிள்ளிவிட்டாள் பிள்ளைகுரல் வீறிடவே கேட்கவகை
பண்ணியவள்தன் னுயிரைப்பட்டாள் போல்சபைநடு
வேதோன்றினளே (124)

### விடு சிந்து

காலிலிட்ட பாடகமும் - இவள்
கையில் குழந்தையும் முக்காடும்
நீலமொத்த வேல்விழியும் - நிலா
வைச்சருவும் திரு முகமும்

கோலமுற்ற வார்குழலும் - செட்டி
கொற்றந்தையார் மகள் போல்வடிவும்
சோலைசுற்று அம்பலத்தே - நீலி
தோதகமாய் வந்து தோன்றினளே (125)

## நீலிக்கண்ணீர்

பண்கள்படி வண்டுசுத்தும் - தென்
பழசைப் பதிதனில் உள்ளவரே
பெண்களோடே பிறந்தவரே - என்னைப்
போலவே பெண்களைப் பெற்றவரே
திங்கள்சேருங் கச்சியிலே - யென்னைத்
தேசமறியவே கொண்டு வைத்து
கனங் கொளாதேவன் கணவர் - நடுக்
காடுதனில் விட்டு வந்துவிட்டார் (126)

செட்டி பெண்ணான -------
சிவகாமி சுந்தரி வாழுமென்னூர்
பட்டுடுத்திப் பணிபூண்டு - என்னைப்
பாவனையாகவே கொண்டு வைத்து
சட்டமாகவே வார்த்தைச்சொல்லி - இவர்
தாமேஎன்னை யேன்மணம்தான் புணர்ந்து
விட்டுப்போகின்றதைக் கண்டீர்களோ - தமிழ்
மெச்சும் பழசையில் வளர்பவரே (127)

### வேளாளர்

செட்டியாரே யேதுகாணும் - இவள்
சேதிகள் சொல்லவே நாங்கேட்டோம்
உம்மாலேபட்டபாடு மெத்தவென்றாள் - பழிப்
பாதகமும் பண்ணிப்போகீறா ரென்றாள்
திட்டமாகவே உரைத்திடு - நீ
சேதி யொளியாதே சொல்லுமென
முட்டவேயிவள் தொடர்ந்துவந்து - சேதி
சொல்லத் தானு ரைப்பான் (128)

### தேசிகன்

கெட்டேனே நீலிகண்டீர் - இவள்
கையில்குழந்தையும் முக்கள்ளி கண்டீர்
பொட்டாரும் வாணுதலும் - இந்த
பொங்கிய கொங்கையும் புன்சிரிப்பும்
மட்டான வாள்விழியும் - அந்த
மாயனுக்கன்று முலை கொடுத்த
நிஷ்டூரியிவள் கண்டீர்களோ - புகழ்ந்
திடும் பழசையில் ஊர்பவரே (129)

### நீலி

மையெடுத்த கண்ணிமையும் - அந்த
மாவடியீசுவரர் தாமறிய
கைகொடுத்தேன் நானிவர்க்கே - அந்தக்
கச்சியிலைந்து பிராயத்திலே

மெய்யெடுத்தே வாழ்ந்திருந்தேன் - என்னை
விட்டுப்பிரிந்தவர் தள்ளிவைத்து
பையெடுத்துப் போகலுற்றார் - நீங்கள்
பாரும்பழசையில் ஊர்பவரே (130)

எண்சா ணுடம்பளவும் - இந்த
ஈரலும்பிச்சும் இவர்க்காக
புண்ணானேன் வார்த்தையினால் - யிந்த
பொன்னின்குழந்தையைப் பெற்றவரே
கண்பாரார் என்னையிப்போ- யிவர்
கைபடக்கால்படக் குற்றமென்பார்
பெண்பாவங் கொள்ளுவரோ - நான்
பேய்ச்சிகண்டீர் தொண்டநாட்டவரே (131)

**வேளாளர் — வாதம்**

தும்பிசேரும் அம்பலத்தே - யிவள்
சொல்லி யழுதபின் மானங்கண்டு
தம்பிவாரும் பேரென்னதான் - இந்த
தாரா மனங்கலங்க தன்மமல்ல
வம்பியல்ல வெள்ளாட்டியல்ல - இந்த
வழிபற்றி வந்த வெள்ளாட்டியல்ல
நம்பிவந்தாள் உன்பின்னே - நடுக்
காடுதனில் விட்டு வரலாமோ (132)

### தேசிகன்

கல்லை வென்ற வின்னெஞ்சமும் - யிவள்
கமலத்தை யொத்த திருமுகமும்
வில்லை வென்ற புருவங்களும் - இவள்
மேகத்தை யொத்திடும் பூங்குழலும்
அல்ல வென்ற துடியிடையும் - இவள்
ஆரத்தை யொத்திடும் வெண்ணகையும்
கொல்ல வந்த கூற்றன்கண்டீர் - தமிழ்
கூறும் பழசையில் ஊர்பவரே (133)

### நீலி

இவ்வார்த்தை கேளாதே - யிவ
ரென்னைப் பிரிந்த பேதகத்தால்
பொய்யே யொத்தமேனியுமாய் - இவர்
பின்னேநடந்து தொடர்ந்து வந்த
கோபத்தினால் சொல்லுகிறார் - எந்தன்
குஞ்சும் குழந்தையும் நானுஞ்செய்த
பாவத்தைஎன்ன சொல்வேன் - நீங்கள்
பாரும் பழசையில் ஊர்பரே (134)

### தேசிகன்

அய்யோதான் நீலிகண்டீர் - அடைக்
கலம் உங்களுக் கபயம் கண்டீர்
மெய்யாகவே நீலிகண்டீர் - இவள்
இமசைக்காய் வந்த பூதங்கண்டீர்

இவள் கையில் இடுக்கியதும் - யிந்த
கள்ளியும் பாவையும் சூதுகண்டீர்
தூய்யவரே நாட்டவரே - இவள்
சொல்லிய வார்த்தையை நம்பாதே (135)

**நீலி**

நான்பெண்ணான நாளன்றுமுதல் - எந்தன்
பிறந்தகந் தன்னையும் மறந்துவிட்டேன்
நன்றாகவே கொண்டிருந்தீர் - யிந்தக்
கச்சி யூரப்பர் தாமறிய
மன்னாலும் நான்பெரியோன் - (நல்ல)
வங்கிஷத்தாலும் நான்பெரியோன்
என்று சொல்லி யிந்தப்படி - என்னை
மந்தையில் ஏற்றி விட்டீரே (136)

**தேசிகன்**

அங்கங்கை யொடுங்கியதும் - இவள்
அஞ்சி நடக்கின்ற நாடகமும்
கொங்கைக் குறிகளாகுமே - இவள்
கோலக் குழந்தை யிடுக்கியதும்
மங்கைச்சிலை நுதலும் - இவள்
மாய முகத்தில் விழியழகும்
தொங்கல்முடி பூஷணமும் - இவள்
முன்கைக் கடகங்களும்
கோட்டு விழிகளிரண்டும் - குழல்
காதில் முடித்த குழலழகும்
நாட்டுக்குப் பத்தினிபோல் - இவள்
நாடக வித்தையைக் கண்டீர்களோ (137)

### நீலி

நாடகவித்தை யென்றுசொன்னார் - யிந்த
நாட்டு முதலிகள் கேட்டிடுங்கள்
கூடியிருவரும் வாழ்ந்திருந்தோம் - இந்தக்
கொஞ்சுங் குழந்தையைப் பெற்றவன்றே
போடும் பொருளாக - இந்த
புத்திரன் தன்னை முகம்பாராய்
நாடாளுவீர் யென்னை - அவருடன்
நாற்று நடவாகக் கூட்டிவிடீர் (138)

### தேசிகன்

சொல்லாலு முயர்ந்தவரே - இவள்
சொல்லிய நாடகம் கேட்டீர்களோ
பொல்லாங்கு செய்தறியேன் - இந்த
பொன்னின் வளர்கச்சி தாமறிய
எல்லாரையும் போலே - நான்
எதிரொரு வார்த்தையைச் சொல்லறியேன்
நல்லாங்கு செய்திருந்தேன் - வண்மை
போற்றும் புகழ்தொண்டை நாட்டவரே (139)

### விருத்தம்

கூட்டிவிட ரென்றுசொல்லி குலஸ்திரியாய்ப் பேசுகிறாள்
காட்டில்வா ழும்பேய்ச்சி கருநீலி காராளரே
பூட்டுசடை தனைவிரித்தாள் போய்மறைந்தே
வடிவுகொண்டாள்
நாட்டவரே யிவள்வார்த்தை நல்லதென்று நம்பாதே
(140)

## சிந்து

முட்டறாப் பச்சுடம்பு - இவள்
முன்கையி லேந்திய பாலகனும்
பெண்ணாகவே தொடர்ந்துவந்தா - ளிவள்
தேசமறிந்த நீலி கண்டீர்
துஷ்டாதுஷ்ட நீலிகண்டீர் - இவள்
சொல்லிய வார்த்தையை நம்பாதே
ஒட்டாரமே ஒட்டுகிறாள் - இவளை
ஒட்டுங்கண்டீர் இந்த நாட்டவரே (141)

## நீலி

நம்பாதே நாட்டவரே - நான்
குடியில் பிறந்து குரங்கானேன்
என்னபாவம் செய்தேனோநான் - இவர்களுக்
கெந்த முகூர்த்தத்தில் கைகொடுத்தேன்
அம்பலத்தில் ஏற்றிவித்தார் - என்
அறியாத் தலையில் எழுத்திதுவோ
நம்பிவந்தேன் உங்களைநான் - என்னை
நாற்று நடவாகக் கூட்டிவிடீர் (142)

அஞ்சுவயதிலே கைகொடுத்தேன் - அர
சாணி வலம்வந்து தாலிகட்டி
நெஞ்சு களித்திட - நான்
நீர்வார்த்துக் கொண்ட நாயகனார்
கச்சி வலப்புடைசூழ் - யிந்த
கச்சியி லென்னைத் தள்ளிவைத்து
வஞ்சகமேதான் நினைத்து - இவர்
வந்துவிட்டார் நடுக்காடு தனில் (143)

**தேசிகன்**

காட்டுங்குழல் நீலிகண்டீர் - இவள்
கையிலிருப்பதுங் கள்ளி கண்டீர்
பூட்டியயாக வளமுலையும் - இவள்
குலஸ் திரீயாய்ப் பேசுகிறாள்
காட்டில்வாழும் பேய்ச்சிகண்டீர் - இவள்
கருநீலி காராளா
பூட்டிய சோட்டைதனைவிரித்தால் - இவள்
போய்மறைந்தே வடிவு கொள்வாள்
நாட்டவரேஇவள் வார்த்தையை - இங்கு
நல்ல தென்று நம்பாதே (144)

**நீலி**

நாடியே உன்மனத்தில்
நான்வந்த அடியின் பிறகே
தேடியே வந்ததெல்லாம்
தரிசனத்தில் சொல்ல வில்லை
கூடுமோ உன்னாலே
கூடாது காணும் இப்போ
ஆடுதனைப் புலியழைத்தால்
அதுவரு மோநீ கேளாய் (145)

**தேசிகன்**

நாட்டவரே நீர்கேளும் - நீலி
சொல்லிய வார்த்தையை நம்பாதே
மட்டாரும் பூங்குழலும் - இவள்
வார்த்தைப் பசப்பும் வசைநகையும்

ஒட்டாரக்கள்ளி கண்டீர் - இவளை
ஒட்டிவிடீர் உங்கள் ஊர்கடக்க (146)

### நீலி

நாளுமிட்டு ஊராரறிய - நல்ல
நல்ல பொருத்தமும் தானுமிட்டு
கோலமிட்டு மனைபோட்டு - நல்ல
போதகச் சூளிகைதான் முடித்து
பூண்நூலும் மார்பிலங்கக் - கச்சி
புகழும் வணிகரும் வந்திருக்க
மாமன்என்னை எடுத்துவந்து - நல்ல
அரசானி வலமாகக் கொண்டுசென்று (147)

மாலையிட்டு மணம்புணர்ந்து - நல்ல
மந்திரக் கூரை விரித்துடுத்தி
தாலிகட்டி ஓமம்செய்து - நல்ல
சாஸ்திரி வேதமுகூர்த்த மிட்டு
ஆலவட்டம் வீசிவர - நல்ல
ஐந்து வயதினில் கைப்பிடித்து
நீலிபட்டங் கட்டுதற்கோ - யென்று
நெஞ்ச முருகியே நின்றழுதாள் (148)

### தேசிகன்

அப்பாரேநீர் கேளுமினி - இவள்
ஆசாரஞ் சொல்லுகிற பொய்தனையே
எப்போதும் நீலிகண்டீர் - இவள்
இருக்குமிடஞ் சுடுகாடு கண்டீர்

கைப்பாரும் ஆலங்கிழார் - இவள்
    கையில் குழந்தையும் கள்ளிகண்டீர்
ஒப்பாதே நாட்டவரே - நீங்கள்
    ஓட்டி விடுங்கள் ஊர்கடக்க (149)

நீலி

நாடகங்கள் பண்ணறியேன் - நானும்
    அவரைப் பிரிந் தறியேன்
கூடிமிக வாழ்ந்திருந்தேன் - நீங்கள்
    குஞ்சு குழந்தையைப் பெற்றவரேபின்பு
போடும் பொருளாக - எந்தன்
    புத்திரனும் பகை யாச்சே
நீடுழி வாழ்பவரே - நீங்கள்
    உத்தமரே என்னைக் கூட்டிடுவீர் (150)

## நீலியின் தாலாட்டு
## ராராரோ ராராரோ ராரி ராரோ

சீராளா என்மகனே தேசிகனார் தன்புதல்வா
பாராள நீயெனக்குப் பாலகனாய் வந்தாயோ
சூதுபண்ணி உங்களையர் தொண்டைமண்
    டலஞ்சிரிக்க
சாதுபோன்ற என்னை சதிசெய்து நாளாச்சே (151)

கச்சிநக ரதிபனே கள்ளியென்று உங்களைய்யா
வேசியர்கள் ஆசையினால் வேறுசெய்து போனாரோ
தெள்ளு தமிழ்மணியே தேசிகனார் தன்மகனே
கள்ளியென்றே உங்களைய்யர்
    நடுக்காடுதன்னில் விட்டு வந்தார் (152)

குற்ற முடனே கொடும்பாவம் செய்தேனோ
சற்றருமை பாராமல் தனிவழியே விட்டுவந்தார்
பெரிய குலமணியே பேய்ச்சியென்றே
யென்னையிப்போ
பரிவுடைய உங்களைய்யா பாலகனே ஓட்டிவிட்டார்
(153)

பிள்ளையுனைப் பெற்றபின்பு பெண்பிறந்து
பட்டதுநான்
உள்ளமகிழ்ந்தேன் மகனே உங்களய்யா வேறானார்
கச்சிநகரதிபனே காமாட்சியார் தவமே
வாய்த்த திரவியமே வந்துமெத்த தாங்கீரே (154)

வேசியர்கள் கைவசமாய் வேண்டாதாள் பிள்ளைதனை
ஆசையுடனே எடுத்து ஆற்றுவரோ உங்களைய்யா
ஒழுகுமடவார் மனத்தில் உனக்குநான் வேம்பானால்
அழகுங்குழந்தையென் செய்யுங்காண்
எடுத்தாத்தினாலாகாதோ (155)

எத்தனைதான் கோபம் என்மே லிருந்தாலும்
உற்றக்குழந்தைதனை உகந்துமுகம் பாராயோ
மாநாடு சோலைவளர் மகராசன் புத்திரனே
தேனார் வணிகர்குலச் செல்வனேயிங்குவாராய் (156)

வெள்ளியும் தெற்கடைந்து வேந்தனுமே போய்மறைந்து
கள்ளியும் பாலாமறுத்துக் காலமே வந்தானோ
மருவோங்குந் திருமலைமேல் மாறாவரங் கொடுக்கும்
திருவேங் கிடநாதர் தம்பிதிருநாமம் பெற்றானோ (157)

அக்கர வஞ்சூடும் அரனார் திருவருளால்
மைக்குகனார் செற்பமதில் வந்துதித்த மாமுனியோ
செம்பொன் வடகிரியும் செய்ய அரசாணியும்
அம்புவியும் பெற்ற அழகுநக ரதிபனோ (158)

வைகுந்த நாடும் வளகிரியுஞ் சோணாடும்
மெய்யாந்திரு வாவினன்குடியும் தம்பிமேதினியு
முள்ளவனோ
வைகுந்த நாடும் வளகிரியுஞ் சோணாடும்
செய்யும்புலவருக்குத் தம்பிசேரக் கொடுத்தானோ(159)

வாகுடனே பொன்னாடும் வளநாடும் வையகத்தில்
நாகநற் புலர்க்கு யீந்தானோ ....................
நடுக்கடலில் பள்ளிகொள்ளும் நாராயணன் வரத்தால்
பொறகலத்தில் சோற்றில் புழுவாற்ற வந்தானோ (160)

இலைதீய்ந்து கொடிவறண்டு இல்லையென்று போகாமல்
மழைபேய்ந்து துளிர்வாங்கி
என்மனக்கவலை தீர்த்தானோ
திட்டமுடன் பாண்டியனை சென்றதினாலே எரிந்து
யிட்டதொருபீடம் எதிர்பீடம் இட்டானோ (161)

நிச்சயமாய் என்வயிற்றில் நீகுழந்தையாய்ப் பிறக்க
பச்சை நாவிதனாரப் பாலகனே உங்களைய்யர்
அய்யரேகம்பா அறம் வளர்க்கும் காமாட்சி
துய்யபதம் போற்றும் சுந்தரனே கண்வளராய் (162)

மானாடும் சோலைவளர் மகாராசன் புத்திரனே
தேனார் வணிகர்குலம் செல்வனே கண்வளராய்
நாகரந்தை செட்டிமகன் நல்வணிகன் பெற்றெடுத்த
கோகநவ மணியே கொஞ்சி யழுகாதே (163)

ஊரறிய பேரறிய உங்களைய்யர் முகமறிய
நாடறிய வந்துதித்த நாயகமே கண்வளராய்
சீறி யழுகாதே தேசிகனார் தன்மகனே
பாலமுர்தம் உண்டு தொட்டில்பாலகனே கண்வளராய்
(164)

பூட்டியதோர் பொன்முத்தும் பூனாறக்கையாலே
-உங்கள்
பாட்டி யடித்தாளோ பாலகனே கண்வளராய்
பற்றி உனையெடுத்து பால்வளர்க்கும் கையாலே-
உங்கள்
அத்தை அடித்தாளோ அழுகிறாய் பாலகனே (165)

கொத்தநகை பொன்னுடனே கோபமறியாமல் - உங்கள்
அத்தை அடித்தாளோ ஐவிரல் தண்டாலே
உங்களைய்யர் எடுப்பாரோ அழுகிறாய்ப் பாலகனே
உங்களைய்யர் எடுப்பாரோ அழுகிறாய்ப் பாலகனே
(166)

தெள்ளுதமிழ் வணிகள் தேசிகனார் புத்திரனே
கள்ளியென்று உங்களைய்யர் காடுதனில் விட்டுவந்தார்
காச்சியப்பாலுண்டு கனகமணித் தொட்டிலிலே -
உங்கள்
ஆச்சி அடித்தாளே அழுகிறாய் - பாலகனே - (167)

தண்டையிட்டு சதங்கைகட்டி

தவழ்ந்து விளையாடையில் - உங்கள்
நங்கை அடித்தாளோ அழுகிறாய்ப் பாலகனே
உங்களைய்ய எடுப்பரென்றோ அழுகிறாய்ப் பாலகனே
உங்களைய்யர் எடுப்பாரோ அவர்க்குநீ வேம்பானால்
(168)

நாகரந்தை செட்டியோட குமாரன் திருமகனே
உங்களைய்யர் அடித்தாரோ மயங்குகிறாய் பாலகனே
வேம்பு மினிப்பாமோ வெடிமீன் னொளிவாமோ
பாம்புவிஷம் போமோ பாலகனே யிங்குவந்தாய் (169)

கள்ளியென்றே உங்களைய்யாக்

கடுஞ்சினமாய்ப் பேசுகிறார்
பள்ளியிலே தானுகந்து பாலகனே கண்வளராய்
பொன்னே நவமணியே புகழ்வணிகள் புத்திரனே
அன்னமே தேனே அய்யனே கண்வளராய் (170)

எல்லோரும் வாழ எங்கும் நிலாவெரிக்க
நல்லோர்கள் தொண்டை நாட்டவரும் வாழ்ந்திருக்க
பெற்றார் பகைத்தாலும் பின்னுதவி உந்தனுக்கு
கற்றவ ரருளுனக்கு காத்திடுமே என்மகனே (171)

என்றுசொல்லிப் பாலகனை யியல்பெறவே தானெடுத்து
மன்றுதனிலே விடவே செட்டிமடியில் வந்துஏறியதே
பெண்டாட்டி வேம்பானால் யிந்தபிள்ளையுந்தான்

பெரும்பகையோ
திண்டாட்டம் கொண்டிருந்த

செட்டிமுகத்தைத் தான்பார்த்து

அந்தமாயக் குழந்தைதன்னை அவள்நீலி யிறக்கிவிட
தாய்முகத்தைப்பாராமல் சீறியழுதேகிடந்து
செட்டியிடம் போய்விடுமாம் (172)

## வேளாளரின் - சத்திய வாதம்

## ஆகப்பாட்டு

### விருத்தம்

இப்படியே தாலாட்ட இன்பமுடன் வேளாளர்
தப்பாதே செட்டியுடன் தார்குழலைச் சேர்க்கவென்று
ஒப்பாகத் தான்கூடி உயிர்போகின் றதறியாமல்
செப்பமுடனிருந் துசேர்ந்து பிழையென்று சொன்னார்
(173)

குழந்தைவந்து மடியேற கூடியிருந்த அம்பலத்தோர்
அழுங்குழந்தை தனைப்பார்த்து அநியாய
மென்றுசொல்லி
வளம்பெறவே நின்மனையாள் மனதுங்கலங்
கப்பொல்லாது
பழுதுவந்தால் நாங்கள் பிணைப்பத்திரத்
தைத்தாரோமென்றார். (174)

தெள்ளியசொல் அம்பலத்தார் தேசிகனை முகம்நோக்கி
கள்ளியவள் பேய்ச்சியென்றே களரிதனில் சொல்லுகிறாய்
கொள்ளிவாய்ப் பேயுன்னை கொல்லுமென்று
எண்ணாதே
பிள்ளைத்தாய்ச்சிப் பழியுமக்குப் பெரும்பாவம் போகாதே
(175)

வழிப்பகைதா னென்றுசொல்லி வணிகர்குலப்
பெருமாளே
களிப்பதுதான் காரணமோ கன்னியையும் பிள்ளையையும்
பழிப்பதனை யறியாத பத்தினியைத் தள்ளாதே
இளப்பமாய்தான் பழுதுவந்தால் எழுபதுபேர்
பிணைதானே (176)

புத்திரனை முகம்பார்த்துப் பொறுத்துவிடாய்
புகழ்வணிகா
பத்திரமுங்கை யிலிருக்கப் பயப்படுவாள்
பைங்கொடிதான்
உத்தமனே நின்கோபம் ஒழிந்துவிடீர் என்றுசொல்லி
பத்திரத்தைக் காராளர் பாங்குடனே கேட்டனரே (177)

அழகுடைய பழையனூரில் அம்மையப்பர் தாமறிய
எழுபதுபேர் நாங்கள்பழி இவள்முன்னைக் கொன்றக்கால்
கொழுமுனையில் வாழக் குவலயத்தைக் காப்பவர்கள்
பழுதுபடச் சொல்வதில்லை பத்திரத்தைத்
தாரோமென்றார் (178)

அட்டகஞ்சூழ்ந்த அம்பலத்தோர்
அத்தனைபேரும் எழுந்திருந்து
செட்டியாரே எங்களுக்காய்இவள்
செய்தபிழையைப் பொறுமென்று
கட்டிக்கொண்டு கால்பிடித்துஅவள்
கையில்காட்டிக் கொடுத்தளவில்
சொட்டையாலே கொல்லவென்று சொன்னார்
தொண்டை நாட்டவர்க்கே (179)

### தேசிகன்

பத்தியுடன் கச்சியில்வாழ் பரிந்துபெற்ற னாகரந்தை
புத்திசொல்லக் கேளாமல் புறப்பட்டேன் தனிவழியே
இத்தனையோ தானெனக்கு இசைந்தானா இவ்வளவோ
சித்தமுடனூர் கிழக்கே சிவந்தெழுந்த சூரியனே (180)

பத்தியுடன் கச்சியிலே பதிவிருதைத் தானிருக்க
புத்திசொல்லக் கேளாமல் புறப்பட்டேன் மாளிகைக்கே
இத்தனைதா னெந்தனுக்கு எழுதினது தலைவிதியோ
சித்தமுடனூர் கிழக்கே சிவந்தெழுந்த பகவானே (181)

ஆண்டுமில்லை மாதராசை விடமனது கூடாது
நீண்டபுகழ் உலகுதனில் நிலைபெறவே நாமிருவர்
பூண்டிருக்க வேணுமென்றால் பூவையரே
பொறுத்தமில்லை
மாண்டுவிழு கைக்கோதான் மாதாவே பெற்றாயோ (182)

கொழுத்தபிணந் தின்னும்கண்ட கொள்ளிவாய்ப்
பேயென்றும்
ஒழுக்கமுள்ள வேளாளர் ஒருவருக்குந் தெரியாதோ
கழுத்தைவந்து சூழ்ந்தரவம் கடித்தொழியாப் போகாது
பழிக்குறிய ரானாக்கால் பத்திரத்தை நான்தாரேன் (183)

### வேளாளர்

முக்காலுந் தப்பாது மோசமில்லை எழுபதுபேர்
அக்காலந் தாபரிக்கும் அம்மையப்பர் தாமறிய
விக்கினங்கள் உமக்குவந்தால் மிகப்பழியும்
நாம்தருவோம்
மைக்காலும் பத்திரத்தை வரவழைத்தே வாங்கிவிட்டார்
(184)

**தேசிகன்**

பத்திரத்தை வாங்கியபின் பரிவுடைய தேசிகனும்
சித்தமுள்ளே தானினைந்து சிவனைமனதுச் சரித்து
முத்தமிழ்சேர் அணிகேசன் முடிந்ததுவோ தலையெழுத்து
இத்தனையோ தலையெழுத்து ஏங்கிமனம்
தளர்ந்துநின்றான் (185)

**வேளாளர்**

ஓங்கிநின்ற வணிகனைத்தான் எல்லோருந் தான்கூடி
பாங்குடனே யோசனைகள் பண்ணியபின் காராளர்
தீங்கறியாள் பைங்கொடியாள் திகைத்துநின்று வாடாதே
ஆங்கவளைக் கோவிலுக்குள் அடைத்தறிய
வேணுமென்றார் (186)

ஏத்தரிய கோவிலுக்குள் இருவரையும் போகவிட்டு
சாத்துமணிப் பெருங்கதவைத் தாள்பூட்டித் தங்களிலே
வார்த்தையுண்டோ பிணக்குமுண்டோ வசவுண்டோ
வென்றுசொல்லி
பேர்த்தொருவர் நாவெடுத்துப் பேசாமல் கேட்டிருந்தார்
(187)

## தாலாட்டு

**நீலி**

**ராராரோ ராராரோ ராரிராரோ**

கூராரும் விழிமடவார் கூத்தியர்கள் கொண்டாட
சீராட வந்தீரோ சிறுமைதா னிப்படியோ
போரா லுயர்ந்தவரே பிள்ளைபிணக்கும்
பெரும்பிணக்காய்
போராட்டஞ்செய்து என்னை புறம்விட்டுப் போவார்களோ
(188)

பூவுலகில் மன்னவனே புண்ணியனே அணிகேசன்
நாவலர்கள் கச்சியில்வாழ் நாகரந்தையார் புதல்வா
தோமருவும் புயன்சீதையைப் போல் சிறையிருத்தி
காவலனே எண்ணிவந்த கடுங்கோபம் போட்டுவிடீர் (189)

கொம்மைவரி முலைநீலி குத்திரத்தை மனத்தில்வைத்து
எம்மைவிட்டு வருவானேன் ஏதுகுறை சொல்லுமென்று
செம்மையுடன் அவளுரைக்கத் தேசிகனு மிகக்கலங்கி
அம்மையப்பர் துணையென்று அலறியவன்
விழுந்தானே (190)

நாட்டார்கள் எல்லோரும் நல்வசனம் தானறியார்
வீட்டாசை போட்டுவிட்டு வேசியாசை வெறியாலே
கோட்டாலைப் பண்ணாதே குத்திரத்தைப்
போடுமென்று
தாட்டான் மையாய்நீலி தன்கையதனால் கால்பிடித்தாள்
(191)

### வேளாளர்

என்றுசொல்லி முதலிகளும் இப்படியோ செட்டிகுணம்
நன்றுநன்று நீர்வாரும் நாம்போவோம் அகந்தனிலே
என்றுசொல்லியே நடந்தார் யியல்பெறவே எல்லோரும்
ஒன்றுமறியோம் சிவனே உந்தனோட திருவருளை (192)

### தேசிகன்

ஈய்க்கடியா தென்னை எறும்புகடியாதே - வளர்த்து
தாய்க்குநான் பிள்ளையென்று தாமரையோன்
தான்சமைத்தான்
வாய்க்குநான் வந்ததென்று வையத்தோர் பேசுதற்கு
பேய்க்கிரையாய்ப் போகவென்றே பெற்றாய் என்மாதாவே
(193)

## சிந்து

நின்சேயவான நேரிழையே
நீயே காலன் தனைப்போலே
நாயும்பன்றியும் போல
வேண்டி கொல்லநீ வந்தாயோ
ஆயுந்தமிழ் நாட்டம்பலத்தோர்
அத்தனை பேரும் தான்கூட
சாயுங்காலம் ஆச்சுதென்று
தப்பாதொன்று சொல்லல் உற்றார் (194)

## நீலி

தனம்விளங்கும் கச்சியில்வாழ்
தார் வணிகன் தன்மகனே
அனேகங்காலம் உனைத்தேடி
அடவியெல்லாந் திரிந்து உழன்று
என்னும்படியே கானகத்தில்வந்தாய்
வந்து தொடர்ந்து வந்தேனே
இனிஎண்ணும்படி யென்மனதில்
நினைத்த கருமம் முடிப்பேனே (195)

பையரவணைப் பள்ளிகொண்ட
பச்சை மேனியன் தானாகி
தெய்வவடிவாய்ப் பிறந்தாயே - நீ
சித்திரந் தன்னிலுங் கண்டதில்லை
அய்யோஅய்யோ எங்கள்
அண்ணர் பழிக்காகக் கொல்லுகிறேன்
கொல்லஎனக்கு மனங்கூடுதில்லை
கட்டழகா எப்படி கொல்வேனென்றாள் (196)

## விருத்தம்

**தேசிகன்**

உரைசேரும் பெண்ணேநீ உரைத்தமொழி
உள்ளதுகாண்
வரைசேரும் குவிமுலையீர் வந்தபழி மெய்யதுதான்
விரைசேரும் கானகத்தில் விரும்பியே யிருவரையும்
நிறைசேரும் கல்லெடுத்து நித்திரையில்
போட்டுவிட்டேன் (197)

மானமில்லா மாதருக்காய் வகையுடமைக் காசைபட்டு
ஆனவுயிர் கொன்றுபின்னை அவள்வயிற்றைத் தான்பீறி
கானகத்தில் கள்ளியின்மேல் கருவுதன்னை விட்டெறிந்து
நாணமுடன் உடமை கொண்டு நான் போனேன்
மெய்தானே (198)

## நீலியின் பழிமுடிப்பு

மெய்யென்று சொன்னவுடன் வெறுவெறெனப் பல்கடித்து
அய்யோநான் கொல்வதில்லை அண்ணர்பழிக்
காகஉன்னை
செய்வதுநான் எழுபதுபேர் செட்டியாரே உன்னுடனே
மடிவதுவும் நிச்சயங்காண் மன்னவனேயென்றுசொன்னாள்
(199)

நீலியென்று வடிவுகொண்டாள் நெறுநெறெனப்
பல்கடித்தாள்
வாலியன்றுங் கருங்கடலில் வளைத்தமிர்தம்
கடைந்தார்ப்போல்
மலைகளொடு கிடுகிடென்ன வனநீலி மூச்செறிந்தாள்
கோயிலெங்கும் வளைந்துகொண்டாள்
கொல்லவந்த கூற்றுவன்போல்
(200)

### சிந்து

பார்த்தார் தலத்தார் போனபின்பி
பதினைந்து நாழிகை சென்றளவில்
அடித்தாள் பிடித்தாள் கழுத்தைஅறுத்தாள் - எங்கள்
அண்ணர் பழிக்காகக் கொல்லுகிறேன்
கடித்தாள் குடித்தாள் உதிரமெல்லாம்
கள்ளியும் பாவையும் தானெறிந்தாள்
முடித்தாள் நினைத்த படிநீலி
முதலிகளைக் கொல்லநினைவு கொண்டாள்
(201)

## விருத்தம்

### வேளாளர்

மின்னுபுகழ் சேர்புரிசையில் வாழ்வேளா ளரெல்லாங்கூடிக்
கன்னங்கிழவி வந்ததொரு காரியந்தானு மேதெனவே
தன்னருகிலே அழைத்துத் தயவாகத் தானவர்கள்
என்னமையோ செய்தாளோ என்றவளைக்
கேட்கலுற்றார் (202)

## வேடமிட்ட நீலி

### சிந்து

விண்ணில் சேரும் வெண்பசு
நரைத்த கிழவி வடிவுகொண்டு
பண்ணீர் சேரும் பாராட்டும்
பழசைப் பதியில் பெருந்தெருவே

உண்ணும் பழிதான் வந்ததய்யோ
உதித்தொரு நாழிகை தானாச்சு
எண்ணும் படியோ தான்
என்ற அபய மிட்டாளே (203)

வண்மையுள்ள பழையனூரில்
வரிசையுள்ள வேளாளர்
புண்ணியங்கள் செய்தறியார்
புகழுமக்கு நிகருமில்லை
பண்மொழிக்கு வாழ்வுதரும்
பழையனூரார் செய்தநன்றி
மண்ணூழிக்கும் போகாதென்று
மார்தட்டிக் கொண்டனளே (204)

முகடுதனை யேபீறி
முதலிமார்களைத் தான்தேடி
விகடமிட்ட கிழவியைப்போல்
விருத்தாப் பியமாகி
தகடுதலை நரைத்தவள்போல்
தள்ளாடி தள்ளாடி
பகடின்வாய்ப் பழசையதனில்
பாய்ந்தவள்தான் போகலுற்றாள் (205)

மலையொத்த புயத்தாரே
வாருங்கள் மக்களே
அலையத்தி லண்டத்தீரே
அவள்நீலி கொன்றுவிட்டாள்

பாலையொத்த மொழியாரே
பழிசுமந்து கொண்டீரே
நீலிகெட்டே உங்களையும்
நெருப்பில் விழச்செய்தாளே (206)

**வேளாளர்**

என்றவர்க்குச் சேதிசொல்ல
எல்லோரும் நடுங்கிநின்று
நன்றுநன்று நீலிசெய்த
நாடகத்தை யறியாமல்
கண்டுசொன்ன செட்டிசொல்லைக்
கபடென்று எண்ணிவிட்டோம்
என்றும் விதிப்படிதான்
எழுத்துப் படியானதுவே (207)

## வேளாளர் எழுபதின்மர் உயிர் துறத்தல்

புத்தர்தலக் கோயில்சென்று
புக்கபிணங் கண்டபின்பு
உத்தமர்கள் பழையனூரில்
உடன்படவே எல்லோரும்
சித்தமுடன் முதலிகள்தான்
தீக்குழியிலே விழுந்தால்
எத்திசைக்கும் கீர்த்தியுண்டாம்
ஈடேற்றம் பெறலாமே (208)

மருப்பொதும் செங்குவளை
மாலையணி காராளர்
விருப்பமுடன் வெண்ணீற்றை
மெய்க்கணிந்து சங்கரனார்

திருப்பாதந் துணையெனவே
சிந்தையுள்ளே உச்சரித்துக்
குருபாதத்தை மனத்தில்வைத்து
கோவென்று தானடந்தார் (209)

சீலமுள்ள காராளர்
சிந்தைமிக வேமகிழ்ந்து
ஆலமுண்டார் கோயிலிற்சென்று
அடிபணிந்து போற்றிசெய்து
சூலமுடன் எங்களுக்குத்
துணையாக வருகவென்று
கோலமுடன் வந்துநின்று
குழிபறித்தே அனல்வளர்த்தார் (210)

தெண்டிசைசூழ் புவிவாழத்
திருவாலங் காடுவாழ்க
மண்டலத்தோர் மிகவாழ
மன்னவர் செங்கோல்வாழ
தண்டலைசூழ் பழையனூர்
தப்பரிக்குங் குடிவாழ
உண்டெனவே அஞ்செழுத்தை
ஓதினவர் மிகவாழ (211)

அரிவளையர் தமிழ்வாணர்
அனைவோர் களும்வாழச்
செறி புவியிலுள்ள
சிவனுமே வாழவென்று

தெறி அறுபத்தொன்பது
    பேரும் நின்றுகொண்டு
துயர் கடலில்
    எழுந் திருந்தார் (212)

அறுபத்து ஒன்பதுபேரும்
    அக்கினியில் வீழ்ந்தபின்பு
உளவொருவ னறியாமல்
    உழவெனவே போயிருந்தான்
சிறுமகள் போலவன்றனக்கு
    திருவமுது கொண்டுடனே
விறுவிறென விரைந்துசென்றார்
    விசனமென்ன மகனே (213)

வந்தமகள் சொல்புதுமை
    வாகுடனே தான்கேட்க
என்தகப்பா நீகேளாய்
    இரவொருத்தி மாளிகையில்
அந்தபம் போட்டடைத்தவனை
    அவள்நீலி கொன்றுவிட்டாள்
வெந்தணலில் அறுபத்தொன்பதுபேரும்
    விழுந்துவிட்டார் என்றுரைத்தாள் (214)

அப்பழிக்கு நானுமுனைக்கான
    அறியதொரு மகளாரே
இப்பழிக்கு என்செய்வேன்
    என்றுசொன்ன வேளாளன்
ஒப்பீது என்றால்நீயும்
    உயிர்தரித்து இங்கிருக்கநன்றோ
கைப்பலமாய் கொழுக்கழற்றி
    கழுத்தில்வையா யென்றுசொன்னாள் (215)

பொய்யான மகள்சொல்லைப்
பிரியமுடன் தான்கேட்டு
மாயமகள் சொன்னபுத்தி
மனத்திலே தானுகந்து
உபாயமெனவே கொழுக்கழற்றி
படுகளத்தில் வேளாளன்
தீயில்விழுந் தவருடனே
சிவலோகஞ் சேர்ந்தானே (216)

## தேசிகன் மனைவி கணவன் இறப்பினை அறிதல்

ஆளுவிட்டுக் காராளர்
அருள்வணிகன் தன்னையினி
தாளமுடன் மேளமுமாய்
தண்ணீரால் குளிப்பாட்டி
வாளையுடன் சந்தனத்தால்
மகளுக்காக அலங்கரித்து
எளிதங்கள் வாராமல்
எடுப்பிக்க வேணுமென்றார் (217)

பிணக்கோலச் செட்டியுடன்
பெண்சாதி வருமுன்னே
மணக்கோலம் தான்போலே
வணிகனையும் அலங்கரித்து
கணக்கோரம் சொல்லாத
காராளர் தான்கூடி
இணக்கோல மன்னவர்கள்
யிருமென்றே தானிருந்தார் (218)

காஞ்சிநகர் தன்னிலேதான்
    கைக்கொடுத்த காதலியான்
காஞ்சிபுரந் தன்னிலேதான்
    கைக்கொடுத்த காதலிக்கு
வாஞ்சையுடன் சிவிகையுடனே
    அனுப்பிய பின்
நாஞ்சோதி ஏகம்பர்
    நற்ற வருமே (219)

## தேசிகனின் மனைவி புலம்பல்

என்கணவன் தான்சேர்ந்து - நீலி
    கையால்சவமாகி விட்டாரோ
சாந்தணையும் பூமுலையாள்
    சங்கரனே போற்றியென்று
வஞ்சகமாய் ஓலைகொண்டு
    வந்தவற்கு வரிசைசெய்து
சேர்ந்துவரும் பெண்களுடன்
    செட்டிகளும் கூடவர
போந்துமிகப் பரியேறிப்
    புறப்பட்டாள் பொற்கொடிதான் (220)

வரிசையுள்ள காராளர்
    வளமேவும் பழசையிலே
வாராரும் பூமுலையாள்
    அணிகேசன் பக்கல்வந்து
பேரான நாகரந்தை
    பெற்றதொரு தேசிகனே

பூராய மாய்ப்பிறந்து
போனதென்ன வென்றழுதாளே (221)

கச்சி நகர்வாழும்
கார்வணிகன் தன்மகனே
மெச்சுகின்ற என்வணிகன்
வியாபாரம் பண்ணவிங்கே
கொஞ்சிப்பழி வாங்கும்
கூறுநீலிதான் தொடர்ந்து
அச்சமற்ற செட்டிதனை
அவள்நீலி கொன்றுவிட்டாள் (222)

கொன்றுவிட்டாள் என்றவுடன்
குலவணிகன் தன்தேவி
என்னசெய்யப் போகின்றேன்நான்
இனியெனக்கு வாழ்வுமென்ன
மன்னவனார் தன்னுடனே
மடிவதே நல்லதென்று
சொன்னமாது தானெடுத்து
தொல்புவியில் தானமிட்டாள் (223)

அணிகேசன் தன்தேவி
மனதுமிக வேதுணிந்து
மணிசேரும் காவேரியில்
வந்துநீர் தானாடி
அணியா பரணமுடன்
ஆனகலை தானுடுத்தி
பணிசேரும் மென்முலையாள்
பரியேறி மீண்டுவந்தாள் (224)

கங்கைக்குல மன்னவரே
காராளரே மிகவும்
பொங்குபுகழ் பெறுவீர்உங்கள்
புத்திரர்தான் எங்கேயென்றாள்
கங்கையுள்ள மேனியனை
தார்வேந்தர் தான்காட்ட
மங்கையுமே தான்பார்த்து
மனமகிழ்ந்து வாழ்த்தினளே (225)

என்னுடைய என்கணவன்
என்மனையில் மாளாமல்
பின்மதியி னாலேதான்
புறப்பட்டு வந்ததினால்
செந்நெல்வயல் சூழ்பழசை
தெய்வமெனும் அம்மையப்பர்
சன்னதியில் மாளவென்று
தலையெழுத்தில் எழுதினரோ (226)

## கணவனுடன் உயிர் துறத்தல்

மண்டலங்கள் தான்வாழ்க
மன்னவர்கள் தான்வாழ்க
எண்டிசையில் காராளர்
யியல்வணிகன் தான்வாழ்வென்று
அண்டிநல்ல தேசிகன்கையினை
யாராச் சேர்ந்துகொண்டு
கொண்டமுனை தவறாமல்
குதித்துவிட்டாள் தீக்குழியில் (227)

எல்லாரும் கண்கலங்கி
இப்படியோ என்றுசொல்லி
அல்லமரும் குழலாளும்
அருள்வணிகன் தன்னுடனே
நல்லசிவ பதமடைந்தார்
நல்புவியில் கார்நீலி
சொல்லுகந்த நாடகத்தை
துதிப்பவர்கள் வாழ்ந்திருப்பார் (228)

நீலிசெட்டி தனைத்தொடர்ந்து
நிகழ்பழைய னூரில்வந்து
கோலியவன் தனைப்பிடித்து
கொன்றதனால் காராளர்
சோலிபண்ணா தெழுபதுபேர்
துணிந்துயிரை விட்டகதை
பாடித்தினமே படிப்பார்
பண்புடனே வாழ்வாரே (229)

உரசமுடன் அண்ணர்பழி
உபாயமாய் வாங்கவென்று
சரசமுடன் நீலிதனைத்
தொடர்ந்து வந்தகதை
பரவுபுகழ் பழையனூர்
நாடகத்தைப் படிப்போரும்
விரவுடனே கேட்போரும்
வீறுபெற்று வாழ்வாரே (230)

# பின்னிணைப்பு

## அருஞ்சொற் பொருள் விளக்கம்

| | | |
|---|---|---|
| அடவி | - | காடு |
| அத்தகிரி | - | மேற்குமலை |
| அந்தபம் | - | தனிமை |
| அயன் | - | நான்முகன் |
| அலகை | - | பேய் |
| ஆலவட்டம் | - | விசிறி |
| இந்து | - | சந்திரன் |
| கபடு | - | வஞ்சகம் |
| கன்னங்கிழவி | - | கருமையான மூதாட்டி |
| காச்சுண்டை | - | பொற்காசு |
| காதம் | - | பத்து மைல் தொலைவு |
| காராளர் | - | வேளாளர் |
| காரை | - | ஆடை |
| காலாழி | - | மோதிரம் |
| குத்திரம் | - | வாள் |
| குண்டுனி | - | கோள்சொல்பவன் |
| கூளிகள் | - | பேய்கள் |
| கெண்டிகை | - | கமண்டலம் |
| கோட்டாலை | - | துன்பம் |
| கோலிகன் | - | நெய்வோன் |
| சந்ததம் | - | எப்பொழுதும் |
| சன்னகம்பளி | - | முத்தாலான கம்பளி |
| சீரா | - | சிற்றுண்டிவகை |

| | | |
|---|---|---|
| சீலமலை | - | அழகியமலை |
| சூலி | - | துர்க்கை |
| சூரிகை | - | கத்தி |
| சூளையர் | - | விலை மகள் |
| சொட்டை | - | வாள் |
| சொர்ணம் | - | பொன் |
| சோலி | - | காரியம் |
| தகடுதலை | - | அடர்ந்த தலை |
| தவசு | - | தவம் |
| தன்மம் | - | அறம் |
| தாட்டாண்மை | - | கணவன் |
| துற்றமலர் | - | குவிந்தமலர் |
| தோதகமாய் | - | வஞ்சகமாய் |
| பத்திரைச்சடையார் | - | கங்கையை அணிந்த சிவன் |
| பத்தியாலேகாம்பர் | - | சிவன் |
| பத்திமணிக்குழை | - | முறையாக அமைக்கப்பெற்ற மணிக்குழை |
| பீலிகை | - | மாதர் காலணியின் ஒருவகை |
| பூராயம் | - | விசித்திரம் |
| பையரவு | - | படமெடுக்கும் பாம்பு |
| மாகம் | - | மேலிடம் |
| மானாபரன் | - | தன்மதிப்புள்ளோன் |
| முகடு | - | உச்சி |
| மொண்டிப்பேய் | - | நொண்டிப்பேய் |
| வம்பி | - | தீயமாது |
| வாஞ்சை | - | விருப்பம் |
| விகடம் | - | வேடம் |
| வியாகூலம் | - | துன்பம் |
| விருத்தாப்பியம் | - | கிழத்தன்மை |
| வெள்ளாட்டி | - | பணிப்பெண் |

# சொல்லடைவு

அண்ணல்
அடைக்கலம்
அடைக்காய்
அபயம்
அம்பலம்
அம்புவி
அய்யரேகம்பா
அரசாணி
ஆதிவராகன்
ஆலங்காடு
ஆலங்கிழார்
ஆலவட்டம்
ஆலமுண்டார்
ஆவிக்கரை
ஆனகலை
ஈசன்மகன்
உபகாரி
ஊதாரி
எண்சாண்
எதிர்பீடம்
எழுத்தாணி
ஏகம்பவாணர்
ஏகாம்பர்
ஏலம்
ஒட்டாரம்
ஓமம்
கடகம்
கண்ணப்பர்
கணபதி
கதை
கந்தணி
கம்பிச்சேலை
கருநீலி
கருமம்
கனகமணி
கனநீழல்
காஞ்சிபுரம்
காச்சுண்டை
காரை
காளத்தி
காலன்
கானமயில்
குகனார்
குரு
கூற்றுவன்
கொத்தநகை

கொழுமுனை
கொன்றையஞ்சடையார்
கோத்திரம்
கௌசிகன்
சங்கினம்
சம்பந்தர்
சப்பிரமஞ்சம்
சரஸ்வதி
சலங்கள்
சவ்வாது
சவுரி
சித்திரம்
சிவகயிலை
சிவகாமிசுந்தரி
சிலந்தி
சிலைநுதல்
சூளையர்
சூலி
சேவகன்
சோணேசர்
தண்டை
தந்திரம்
தமிழ்வாணர்
தரிசனம்
தாம்பூலம்
தார்மார்பன்
தாழம்
திரவியம்
திருவாலங்காடு
தேவதாசி
தொண்டநாடு
நல்வசனம்
நவமணி மோதிரம்
நாகச்சுற்று
நாவிதனார்
நாலுவடகம்
நான்மறையோன்
நிமித்தம்
நீள்வேந்தர்
நீலி
நெளி மோதிரம்
பங்கயம்
பச்சுடம்பு
பச்சை வண்ணன்
படுகளம்
பண்டையனூர்
பணிமொழி
பத்திமணிக்குழை
பதக்கம்
பதிவிரதை
பவழம்
பழசைநகர்
பழையனூர்
பனஞ்சாரு

பனைக்கோடு
பாடகம்
பாணன்
பாதகம்
பாதியனூர்
பாவலன்
பாலை
பிணைப்பத்திரம்
பீதாம்பரம்
புத்தர் தலக் கோயில்
புவனம்
புனுகு
பூண்நூல்
பூம்பாவை
பூமிபாலன்
பெண்சாதி
பேட்டையம்பதி
பேய்ப்பெண்
போதகச் சூளிகை
போசனம்
மச்சினன்
மந்தை
மருகன்
மலையரையன்
மனுநீதி
மாதேவி
மாயன்
மாவடியீசுவரர்
மானாபரன்
முத்தமிழ்
முதலிகள்
முருகன்
மெழுகு
வஞ்சியர்
வரிசை
வள்ளி
வளநாடு
வலப்புடை
வனநீலி
வானுதல்
வார்குழல்
வான்கோழி
விந்தைவிழி
வெண்ணிறல்
வெள்ளிச்சரிகை
வெள்ளித் தாண்டகம்
வேத முகூர்த்தம்
வைகுண்டம்

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| பாடல் | பாடல் எண் |
|---|---|
| அக்கரவஞ் சூடும் | 158 |
| அங்கம்கை யொடுங்கியதும் | 137 |
| அஞ்சு வயதிலே | 143 |
| அட்டகஞ் சூழ்ந்த | 179 |
| அட்டகிரி எட்டும் | 119 |
| அடித்தாள் தலையை | 66 |
| அடியேன் தானும் | 33 |
| அடையில் நதி | 67 |
| அண்ணர் பட்ட | 61 |
| அணிகேசன் தன்தேவி | 224 |
| அந்த ஊரில் | 31 |
| அந்தமுடன் கொக்கரித்து | 112 |
| அப்பழிக்கு நானுமுனை | 215 |
| அப்பாரே நீர்கேளும் | 149 |
| அப்போ திவர்கள் | 32 |
| அய்யோதான் நீலிகண்டீர் | 135 |
| அரிவளையர் தமிழ்வாணர் | 212 |
| அல்லமருங் குழலாளே | 88 |
| அவன் நீலன் | 47 |
| அழகுடைய பழையனூரில் | 178 |
| அறம் வளர்த்தபின் | 84 |

| பாடல் | பாடல் எண் |
|---|---|
| அறுபத்து ஒன்பது | 213 |
| ஆக்கிரமாய் கொக்கரித்து | 53 |
| ஆண்டுமில்லை மாதராசை | 182 |
| ஆரணியந் தன்னில் | 36 |
| ஆளுவிட்டுக் காராளர் | 217 |
| ஆறுமே லவரும் | 21 |
| இடையழகும் உடையழகும் | 90 |
| இப்படி யாண்டு | 15 |
| இப்படியே தாலாட்ட | 173 |
| இருவர் மனதும் | 28 |
| இலகு கதிரோன் | 39 |
| இலை தீய்ந்து | 161 |
| இலை வேம்படிவாழ் | 56 |
| இவ்வார்த்தை கேளாதே | 134 |
| இஷ்டமாகவே வீடுமுண்டு | 96 |
| ஈக்கடியா தென்னை | 193 |
| ஈராறு தோள் முருகா | 3 |
| உங்களைய்யா ரெடுப்பாரென்றோ | 186 |
| உரசமுடன் அண்ணர்பழி | 230 |
| ஊரறிய பேரறிய | 164 |
| ஊருடன் பகையாதே | 72 |

எண்சா னுடம்பளவும் 131
எத்தனைதான் கோபம் 156
எந்தன் தலையில் 22
எல்லாரும் கண்கலங்கி 228
எல்லாரும் வாழ 171
என்கணவர் தான்சேர்ந்து 220
என்னுடைய என்கணவர் 226
என்றவர்க்கு சேதி
சொல்ல 207
என்று சொல்லி பாலகனை 172
என்றுசொல்லி
முதலிகளும் 192
ஒட்டாரமே ஒட்டுகிறாய் 107
ஓங்கிநின்ற
வணிகனைத்தான் 186
ஓலை கண்ட 40
கங்கைக்குல மன்னவரே 225
கச்சிநகர் வாழும் 222
கச்சி நகரபதினே 152
கச்சியச்சாலை தவஞ்செய்த 10
கண்டான் நீலன் 51
கணபதி யென்றிட 1
கரியமலை
போல்விழுந்தான் 54
கள்ளியில் போட்டு 25
கள்ளியென்றே
உங்களைய்யா 170
கல்லை வென்ற 133
கலைகளுறும் மால்மருகா 2
கலைசேர் கனாக்கண்டாள் 55
காஞ்சி நகர் தன்னிலே 219
காஞ்சி புரத்தில் 13
காட்டுங்குழல் நீலி 144
காட்டுடனே துணை 57
காதம் காதமரை 24
காரியமுண்டு
கணக்குமுண்டு 98
கால்பரவும் பந்தலிட்டு 110
காலிலிட்ட பாடகமும் 125
குருட்டை முடத்தை 29
குழந்தை வந்து மடியேற 174
குற்றமிட்டு செட்டிதனை 89
குற்றமுடனே கொடும் 153
கூட்டி விடீரென்று 140
கூர்மழு கூர்வேந்தன் 50
கூராரும் விழிமடவார் 188
கெட்டேனே நீலிகண்டீர் 129
கேடுதனைச் சொல்லாதே 74
கொத்த நகை
பொன்னுடனே 166
கொம்மைவரி முலை நீலி 190

| | |
|---|---|
| கொம்மைவரி முலையாளே | 113 |
| கொழுத்த பிணம் தின்னும் | 183 |
| கொன்று விட்டாள் | 223 |
| கோள் சொல்லி | 71 |
| சகலதுக்க மான | 79 |
| சந்தனமென் கொங்கை | 82 |
| சாம்பலாண்டி | 35 |
| சித்தம்பல மறிய | 9 |
| சித்திரம்போல் பந்தலிட்டு | 93 |
| சிந்தைமிக நொந்துருகி | 92 |
| சிந்தை மெத்தவே | 109 |
| சிறந்த புகழ் வளநாட்டில் | 38 |
| சிறுத்த இடையாய் | 48 |
| சீராளா என்மகனே | 151 |
| சீலமுள்ள காராளர் | 210 |
| சுண்ணாம்பு தானுமில்லை | 99 |
| சுற்றிநின்ற பேய்கூடி | 58 |
| சூரியனை அடிதொழுது | 65 |
| சூல் நிறைந்த | 95 |
| சூலி முதுகில்சோறு | 12 |
| செட்டி பெண்ணான | 127 |
| செட்டி மகனாயிருந்து | 114 |
| செட்டியாரே ஏதுகாணும் | 128 |
| செட்டியாரே வாரும் | 97 |
| செடிகள் தோறும் | 42 |
| செந்தமிழ் சேர் | 26 |
| செந்துவர்வாய்க் கன்னியை | 94 |
| சொல்லாலு முயர்ந்தவரே | 139 |
| தண்டையிட்டு சதங்கைகட்டு | 168 |
| தனம்விளங்கும் கச்சியில் | 195 |
| திண்தோள் சைவச்சிவன் | 49 |
| திருத்தமுடன் நாகரந்தை | 78 |
| திருமறை சேரெழுத்தாணி | 4 |
| திருவளர் பரவும் | 27 |
| தும்பி சேரும் | 132 |
| தெண்டிசை சூழ் | 211 |
| தெள்ளுதமிழ் அம்பலத்தில் | 124 |
| தெள்ளுதமிழ் வணிகன் | 167 |
| தெள்ளியசொல் அம்பலத்தார் | 175 |
| தேங்கிவரும் புகழானே | 118 |
| தேட்டமுடன் பதிதளர்ந்து | 37 |
| தோப்பது கொண்டு | 75 |
| நடுப்படச் சுணையில் | 20 |
| நந்த வனங்கள் | 34 |
| நன்றாகக் காஞ்சிவாழ் | 6 |
| நன்றாகத் தன்பதிக்குள் | 83 |
| நன்றாக நன்றாக | 5 |
| நம்பாதே நாட்டவரே | 141 |

நாகரந்தை செட்டியோட 160
நாட்டவர்கள் எல்லோரும் 191
நாட்டவரே நீர்கேளும் 146
நாடகங்கள்
பண்ணறியேன் 150
நாடக வித்தையென்று 138
நாடியே உன்மனத்தில் 145
நாளுமிட்டு ஊராரறிய 147
நாற்று வயல் 69
நான் பெண்ணான 136
நிச்சயமாய் என்வயிற்றில் 162
நில்லாய் நீ யென்று 108
நிலைபெறவே
சொல்லுகிறோம் 62
நின் சேயவான 194
நீலிசெட்டி தனைத்
தொடர்ந்து 229
நீலியென்று
வடிவுகொண்டாள் 200
பண்கள்படி வண்டுசுத்தும் 126
பண்ணுதமிழ்ப் பாராட்டும் 87
பட்டுக் கிடந்த 59
பட்டுக் கைவளை 18
பத்தியுடன் கச்சியில் 180
பத்தியுடன் கச்சியிலே 181
பருவளர்சேர் மொழியாளே 105
பழகதலி கமுகு 85
பனஞ்சாரு மொழியாளை 86
பாடிக் கொண்டு 44
பாடிமணிக் குலமேவும் 68
பார்த்தார் தலத்தார் 201
பார்த்திருந்தே நானும் 103
பாரறியப் பிறந்தேன் 101
பிணக்கோல செட்டியுடன் 218
பிரியமதுற்று மன்னமா 14
பிரியாத் துணையே 46
பிள்ளை உனை 154
பிறதாரம் விரும்பாதே 76
பின்னாலே வளைந்த 100
புத்தர் தலக் கோயில் 208
புத்திகள் சொல்லி 19
புத்திரனை முகம்பார்த்து 177
பூட்டியதேர் பொன் 165
பூவுலகில் மன்னவனே 189
பையரவணைப் 196
பொய்யான மகள் 216
பொன்மணித் தொட்டிலில் 30
போனீர் வந்தீர் [illegible]
மஞ்சாரும்
குடைமனையில் 123
மட்டமருந் தோளுடையான் 66
மண்டலங்கள் தான்வாழ்க 227

| | |
|---|---|
| மருப்பொதும் செங்குவளை | 209 |
| மலையொத்த புயத்தாரே | 206 |
| மனம் பெரிய | 81 |
| மனைக் கோட்டு | 117 |
| மாமனார் தன்னை | 17 |
| மாலையிட்டு மணம் | 148 |
| மானகர் சூழ் | 8 |
| மானமில்லா மாதருக்காய் | 198 |
| மானாடும் சோலை | 163 |
| மிஞ்சியகைப் பத்திரத்தை | 120 |
| மின்னுபுகழ் சேர் | 202 |
| முக்காலும் தப்பாது | 184 |
| முகடுதனை யேபிறி | 205 |
| முட்டாறாப் பச்சுடம்பு | 141 |
| முருக்கிநின்ற பூங்குழலாள் | 91 |
| முன்கையைச் சந்தனமாய் | 11 |
| மூலமாஞ் சிவகயிலை | 7 |
| மெத்தபுகழ் நாகரந்தை | 70 |
| மெய்கலங்கி | 63 |
| மெய்யென்று சொன்னவுடன் | 199 |
| மையெடுத்த கண்ணிமையும் | 130 |
| வண்மையுள்ள பழையனூரில் | 204 |
| வட்டமிட்ட கடலுலகில் | 52 |
| வந்தமகள் சொல்புதுமை | 214 |
| வந்து மறித்தாயாகில் | 111 |
| வரிசையுள்ள காராளர் | 221 |
| வருத்தமுடன் மகன் தனக்கு | 77 |
| வரைசேரும் பெண்ணே | 197 |
| வள்ளை யொத்த | 80 |
| வழிப்பகையும் தானென்று | 176 |
| வழியும் விடுவதில்லை | 106 |
| வாகுடனே பொன்னாடும் | 160 |
| வாவிசூழ் கச்சிவிட்டு | 116 |
| விடமதிர நிலமதிர | 121 |
| விண்ணதிர மண்ணதிர | 122 |
| விண்ணில் சேரும் | 203 |
| விடுவேனோ பழிமுடிப்பேன் | 104 |
| விடுவேனோ பழிமுடிப்பேன் | 102 |
| விருந்திருக்க உண்ணாதே | 73 |
| வீட்டை விட்டுவர | 115 |
| வீற்றிருந்த வேம்படியில் | 64 |
| வெள்ளியும் தெற்கடைந்து | 157 |
| வேசியர்கள் கைவசமாய் | 155 |
| வைகுந்த நாடும் | 159 |

# துணை நூற் பட்டியல்

1. கழகத் தமிழ் அகராதி
கழகப் புலவர் குழு
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 16 பதிப்பு
சென்னை - 2000


2. திருவாலங்காட்டில் எழுந்தருளியுள்ள நீலி கதை
ஏகாம்பர முதலியார்
ஸ்ரீ மாதவ விலாச அச்சுக் கூடம்
சென்னை - 1907


3. நீலகேசி
உரை - பொ.வே. சோமசுந்தரனார்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
திருநெல்வேலி - 1964

4. பழையனூர் திருவாலங்காட்டு எழுபது வேளாளர்
தீப்பாய்ந்த மணி மண்டபம் திறப்பு விழா
சிறப்பு மலர் - 1966


5. பழையனூர் நீலி கதை
சுப்பிரமணிய ஐயர் எம்.எஸ்.
வேல் பதிப்பகம்
சென்னை.

6. விறலி விடு தூது
சுப்பிரதீபக் கவிராயர்
வித்தியா ரத்நாகரம் பதிப்பகம்
சென்னை - 1939







திருவாலங்காடு ராஜ கோபுரம்.




திருவாலங்காட்டிலுள்ள
முத்தி தீர்த்தம் உலகி
லுள்ள புண்ணிய தீர்த்
தங்களில் தலைசிறந்தது.




எழுபது வேளாளர் தீப்பாய்ந்ததன் சின்னமாக விளங்கும் மணி மண்டபம்.



திருவாலங்காடு
ஸ்ரீ நடராஜர் சன்னிதி
கோபுரம்.




வள்ளலார் மணிமண்டபமும், அடியார் திருக்கூட்டமும்.